மீண்டு(ம்) வருவேன்

1

சிவ வாக்கு வேறு
சித்தன் வாக்கு வேறில்லை!

– சித்தன் வாக்கு

அந்த வேன் ஸ்ரீ வில்லிபுத்தூரை கடந்து குற்றாலம் நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தது.

இந்த கால நவீன வேன் - ஆகையினாலே உள்ளே போன வாரம் ரிலீசாகியிருந்த புதிய திரைப் படம் ஓடிக் கொண்டிருந்தது!

உள்ளே மொத்தமாய் பத்து பேர். அதில் இரண்டு பேர் தான் படத்தை பார்த்துக் கொண் ருந்தனர். மீதி உள்ள எட்டு பேரில் இரண்டு பேர் செல்போனில் யாருடனோ கதைத்தபடி அமர்ந் திருக்க மீதி ஆறு பேரும் சீட்டுக்கச்சேரியில் மூழ்கி யிருந்தனர்.

பாட்டில் சரக்கும் உள் ஏறியிருந்தது.

அதன் காரணமாக முகத்தில் கோணா மாணலாக சிரிப்பு.

முன் பக்கம் டிவைரை ஒட்டி அமர்ந்தபடி இருந்தான் கணேசன். பதினோறாவது நபர்! டி.வி. செல்போன், சீட்டாட்டம், தண்ணி என்று எதிலும் தொடர்பில்லாதபடி நழுவும் சாலையைப் பார்த்த படி அமர்ந்திருந்தான்.

டிரைவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

"என்ன சார் கம்முன்னு வர்றீங்க... உங்க ஆளுங்க ளோட நீங்க கூடி கும்மி அடிக்கலையா?" -என்று தன் பாணியில் கேட்டான். கணேசன் அதற்கு வார்த்தைகளில் பதில் கூறாமல் உதட்டை சுழித்தான்.

"எல்லாம் ஒண்ணா தானே வேலை பாக்க றீங்க?"

"ம்..."

"இப்ப ஜாலியா இருக்கலாம்னுதானே குற்றாலம் போறீங்க?"

"ம்...."

"அப்பால நீங்க மட்டும் இப்படி ஒதுங்கி வந்தா என்ன சார் அர்த்தம்?"

"நீ பொத்திகிட்டு வண்டிய ஓட்டு..." - என்று சற்று காட்டமாய் பதிலைச் சொன்னான். அந்த பதிலை டிரைவரும் எதிர்பார்க்கவில்லை. முகம் வாடிப் போனது. அதை விடவே கணேசன் முகமும் கலங்கத் தொடங்கியது.

இடையில் அவன் பாக்கெட்டில் செல்போனின் அழைப்பு வேறு. எடுத்து திரையை பார்த்தான்.

ராவுத்தர் என்கிற பெயர் தெரியவும் தவிக்க ஆரம் பித்தான். எடுத்து பேசவும் முடியாமல் இடையில் கட் பண்ணவும் விரும்பாமல் அவன் கிடப்பதில் ஏதோ பொருள் இருப்பது போல் தோன்றியது டிரைவருக்கு.

பின்னால் டி.வி.பார்த்தபடி இருந்த சந்தானம் மட்டும் குரல் கொடுத்தான்.

"ஏண்டா இப்படி அதை அலற உட்டு கிட்டே இருக்கே... ஒண்ணு அதை கட் பண்ணு. இல்லாட்டி பேச வேண்டியது தானே?"

- சந்தானம் கேட்டு முடிக்கவும் அதுவாய் அடங்கவும் சரியாக இருந்தது. 'அப்பாடா...' என்று தற்காலிகமாய் கணேசனிடம் ஒரு பெருமூச்சு.

வெளியே காற்றிலும் அதீதமான சிலுசிலுப்பு.

வானிலும் மோடம் போட்டு மழை வருவதற் கான அறிகுறிகள் தெரிந்தன.

வேனின் விண்டோவை திறந்து காற்றை முகத்தில் மோதவிட்ட சந்தானம் "இந்த வட்டம் சீசன் எதிர் பார்த்ததை விடவே நல்லா இருக்கும்போல" என்று முணுமுணுத்துக் கொண்டான்.

இடையில் கடையநல்லூர் குறுக்கிட்டது.

சிறிய ஊர் - ஆனாலும் அங்கேயும் டிராஃபிக் நெருக்கடி. வேன் சற்று ஊர்ந்து செல்ல நேரிட்ட போது பக்கவாட்டில் திபுதிபு வென்று சிலர் ஓடி வந்து வெள்ளரிப் பிஞ்சையும், உரித்த பலாச்சுளையையும் தலையில் கட்டப் பார்த்தனர்.

சந்தானம் ஒரு பெண்ணிடம் எவ்வளவு என்று கேட்டான். 'அப்படியே பத்து ரூவா சாமி' - என்று

மூன்று வெள்ளரிப் பிஞ்சை ஒரு பாலிதீன் தாளில் போட்டு நீட்டினான்.

"இந்த மூணு பத்து ரூவாயா?"

"வேணும்னா இன்னும் ஒண்ணு தரேன் சாமி...."

"ஒண்ணு எட்டணா - மூணு ஒண்ணரை ரூவா - போனா போவுதுன்னு இரண்டு ரூபா தரேன். என்ன சொல்றே?"

"ஐயோ சாமி கட்டுப்படியாவது சாமி." - வியாபார பேரம் முட்டி மோதி இறுதியில் ஐந்து ரூபாயில் முடிந்தது. அதற்குள் இன்னொருவன் ஐந்து பிஞ்சுகளை தந்து "நீ இதுக்கு அஞ்சு ரூவா கொடு சாமி...." என்று அந்த பெண்ணின் வியாபாரத்தை தன் பக்கம் திருப்பப் பார்த்தான்.

அதற்குள் டிராஃபிக் கிளியராகவும் வேன் வேகமெடுத்தது. சந்தானம் வெள்ளரிப் பிஞ்சில் ஒரு துண்டை வாயில் போட்டபடி மற்றதை உள்ளே சுற்றலில் விட்டான்.

"என்னடா.... ஒரு வழியா மலை ஏறி மாங்கா பறிச்சிட்டே போல...."

"என்னடா சொல்றே?"

"வெள்ளரிக்காய்க்கெல்லாமாடா பேரம் பேசுவே?"

"ஏண்டா இ.பி.கோ. செக்ஷன்படி வெள்ளரிக் காய்க் கெல்லாம் பேசக் கூடாதா?"

"இந்த கிருத்தனத்துக்கு ஒண்ணும் குறைச்ச லில்லை. போய் டாடா செருப்புக் கடைலயும்.

போத்திஸ் குமரன்னு துணிக் கடைலயும் பேசிப் பாரேன்...."

"நாங்க ரேஷன்லயே பேரம் பேசுவோம்ல....?"

"கிழிச்சே.... உன் ஜம்பம்லாம் இந்த மாதிரி தெருவுல அல்லாட்ற ஜென்மங்ககிட்ட தான். ஷோரூம் கடை பக்கம் போனா அவங்க ஃபிக்சட் ரேட்னு நல்லா யானைக்கு நாமம் போட்ற மாதிரி போட்டு அனுப்புவாங்க. அங்க நெத்தியை மட்டு மில்ல முதுகு கை கால்னு எல்லா பாகத்தையும் காட்டுவீங்கடா..."

- சீட்டாடியபடியே நண்பர்கள் பீராய்ந்து கொள்ளத் தொடங்கினர். அப்போதும் கணேசன் மௌனமாகவே அமர்ந்து வந்தான். அவன் கையில் சந்தானம் தந்த வெள்ளரிப் பிஞ்சுத் துண்டு அப் படியே இருந்தது.

"டேய் மாப்ள..... சாப்பிட்றா..."

"வேணாண்டா.... இந்தா....."

"எந்த கப்பல்டா கவுந்துடிச்சு. இப்படி வாழ்வே மாயம் கமலஹாசன் கணக்கா உக்காந்துகிட் டிருக்கே?" - சந்தானம் கேட்கவும் திரும்பவும் செல்போனில் அழைப்பொலி. எடுத்துப் பார்க்கவும். 'ராவுத்தர்' என்கிற பெயர் தெரிந்து அவனை பெரு மூச்சு விடச் செய்தது. இந்த முறை செல்போனை சந்தானத்திடம் தந்து "மாப்ள நான் என் அத்தை செத்துடிச்சின்னு எழவு கேட்க போயிருக்கறதா சொல்லு. செல்லை வீட்ல விட்டுட்டு போயிட் டேன்னு சொல்லு" - என்று சொல்லவும் அதே

போல சொல்லி ராவுத் தரையும் சமாளித்து முடித்தான் சந்தானம்.

வேன் ஓடியபடியே இருந்தது.

"ஆமா... இவன் கந்து வட்டி ராவுத்தன் தானே?"

"ஆமா..."

"இவன்கிட்ட பணம் வாங்கினியா?"

"உம்..."

"எவ்வளவு?"

"இருவத்தஞ்சாயிரம்."

"அதுக்கு வட்டி எவ்வளவு?"

"நாலு வட்டி..."

"ஏன் வட்டிய கட்டலியா?"

"முடியல...."

"எவ்வளவு?"

"மாசம் ஆயிரம்"

"பேங்குல லட்ச ரூபாய்க்கே இப்பல்லாம் ஆயிரம் ரூவா வட்டி தர்றதில்ல. நீ இருவத்தஞ் சாயிரத்துக்கு ஆயிரம் தரணுமாக்கும்?"

"கந்து வட்டின்னா அப்புறம் என்னா?"

"சரி எத்தினி மாசமா தரணும்?"

"அது ஆச்சு ஒரு மூணு மாசமா..."

"அப்ப மூவாயிரத்துக்கு தானா இத்தினி வட்டம் உன்னை கூப்பிட்றான்?"

"நீ மூவாயிரம்கறே... ஆனா ராவுத்தன கேட்டா இருவத்தஞ்சாயிரம் வட்டியோட சேர்ந்து முப்ப தாயிரம் ஆயிருச்சாம். வட்டியும் இனி ஆயிரத்து இருநூத்து அம்பதுங்கறான்."

"ஏண்டா இப்படி போய் இவன் கிட்ட சிக்கினே?"

"எல்லாம் கெட்ட நேரம் தான்."

"மண்ணாங்கட்டி. முதல்ல அவன்கிட்ட வாங்குன பணத்தை ஊருக்கு திரும்பின உடனே அவன் மூஞ்சியில விட்டு எறி."

"முப்பதாயிரத்துக்கு நான் எங்க போக? ஏற்கெனவே கழுத்த சுத்தி கடன்."

"அப்படி பணத்தை வாங்கி என்னடா பண்ணே?"

- சந்தானம் கேட்கவும் சீட்டாடும் நண்பர்களும் அவனை நிமிர்ந்து ஏறிட்டனர்.

அவன் கண்கள் கலங்கிடத் தொடங்கியது.

"டேய் மாப்ளை... நான் என்னடா தப்பா கேட்டுட்டேன்" - சந்தானம் பதைக்கத் தொடங்கி னான். கணேசன் மனதுக்குள்ளே அவன் தங்கை சந்திராவின் முகம் நிமிர்ந்தெழுந்திருந்தது.

ஒரே தங்கை. ஆனால் போலியோ வியாதி காரணமாக ஒரு கால் சூம்பிப் போய்விட்டது. இருந்தாலும் அதற்கான ஷீக்களை அணிந்து கொண்டு நடந்திட அவளால் முடிந்தது. அந்த காலோடு எப்படியோ ஒரு டிகிரி படிப்பையும் முடித்துவிட்டாள்.

அடுத்து திருமணம்!

இந்த காலத்தில் நல்ல நிலையிலுள்ள பெண்களுக்கே 'எவ்வளவு பவுன் போடுவீங்க?' என்கிற கேள்வி முன்னால் நிற்கிறது. இவளோ கால் போனவள். எப்படியோ போராடி ஒரு வரன் அமைந்தது. அதற்கே நூறு பவுன் போட வேண்டிய ஒரு நிலை. கணேசனின் அப்பா கடன் வாங்கத் திணறியபோது சொந்த வீட்டை விற்று கல்யாணத்தை நடத்தி விடலாம் என்றான் கணேசன்.

எப்படியோ சந்திராவுக்கு கல்யாணமாகி அவள் நல்லவிதமாக வாழ்ந்தால் போதும் என்று நினைத்தான். அதற்கேற்ப எல்லாம் நடக்க தொடங்கியது. வீட்டை வந்த விலைக்கு விற்று வந்த பணத்தில் நூறு பவுனை வாங்க முடியவில்லை. அங்கும் இங்குமாக கடன் வாங்க வேண்டி வந்தது. அப்பொழுது ராவுத்தரிடமும் வாங்கும்படி ஆகிவிட்டது.

இதில் பெரிய கொடுமை என்ன வென்றால் சந்திராவுக்கு போட்டு அனுப்பிய நூறு பவுன் நகையை மாப்பிள்ளையின் வீட்டுக்குள் திருடர்கள் புகுந்து திருடிச் சென்றுவிட்டனர். சந்திரா அப்படியே நொறுங்கிப் போய்விட்டாள்.

"ஐய்யோ அண்ணே இப்படி திருடன் கொண்டு போகவா வீட்டை வித்து எனக்கு நகை பண்ணிப் போட்டே?" என்று கதறி அழுதாள்.

"நீங்க முழுமனசோட சந்தோஷமா செஞ்சு போடலை. அதான் திருடன் கொண்டு கிட்டு போயிட்டான்" என்று மாப்பிள்ளையின் அம்மா மூக்கைச் சிந்தியதுதான் கொடுமையிலும் கொடுமை.

எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு போலீசுக்கு போய் கம்ப்ளைண்டு கொடுத்த விதத்தில் வேறு சில ஆயிரங்கள் செலவு.

'நாளைக்கு நகை கிடைக்கணுமா வேண்டாமா?' என்று மிரட்டாமல் மிரட்டி அதற்கு ஐநூறு, இதற்கு ஆயிரம் என்று கணேசனின் டவுசரைக் கழற்றி விட்டார்கள்.

கணேசனும் சில்லு சில்லாக நொறுங்கி விட்டான்.

அப்படிப்பட்டவனை தான் ஆறுதலாக இருக்கும் என்று குற்றாலத்துக்கும் அழைத்து வந்திருக்கிறது அவனது நண்பர் பட்டாளம்.

ஆனாலும் அவன் மனம் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. குற்றால அருவியால் அதை எந்த அளவு அணைக்க முடியும் என்பது போகப் போகத்தான் தெரியும்.

௨

நம் வாழ்வை நம் செயல்களால்
நாம்தான் எழுதிக் கொள்கிறோம்!

– சித்தன் வாக்கு.

ஆர்பரித்து வரும் அருவியே தனி அழகு தான்.

வீடுகளில் பக்கெட்டில் தண்ணீர் பிடித்து பிளாஸ்டிக் மக்கினால் மொண்டு மொண்டு மேனி

மேல் விட்டுக் கொண்டு குளிக்கும் உடம்புக்கெல்லாம் குற்றாலக் குளியல் ஒரு ராட்சஸ சந்தோஷம்!

தலையை சற்று சரித்து முதுகைக் காட்டிய போது முதுகின் மேல் ஒரு போர்ப் படை குதிரைக் கூட்டமே முண்டியடித்துக் கொண்டு ஓடுகிறார் போல் இருந்தது.

ஏராளமான கூட்டம்.

ஒப்புக்கொள்ளப்பட்ட அரை நிர்வாணம்.

அதிலும் ஈரம் சொட்ட நிற்கும் சில பெண்களின் அழகு தனி விசேஷம். ரகசியமாக அதை ரசித்துக் கொண்டே கண்கள் சிவக்க குளித்துவிட்டு வந்து சற்றே ஒதுங்கி மிளகாய் பஜ்ஜி ஏலக்காய் டீ என்று சாப்பிடும் போது உலகில் நாம் ஜென்மம் எடுத்திருப் பதே பஜ்ஜி சாப்பிட்டு டீ குடிக்கத்தான் என்று தோன்றும்.

ஆனால் அங்கேயும் கணேசன் அந்த சோகத்தி லேயே இருந்தான். இடுப்பில் துண்டோடு ஒரு குளியல் போட்டாகிவிட்டது. அப்படி குளிக்கும் போது அப்படியே மூச்சு நின்றுவிட்டால் தேவலை என்று தோன்றியது.

அண்ணாந்து மேலே பார்த்தான்.

பொங்குமாங்கடல் பரப்பில் தண்ணீர் காய்ச்சப் பட்ட பால் போல ஒரு பொங்கி பொங்கி தரை நோக்கி வீசி எரியப்பட்ட பட்டுத்துணியை போல விழுந்தபடி இருந்தது.

கவிஞர்கள் பார்த்தால் கவிதை ரெடி!

அந்த ஞானமே இல்லாத குப்பன் சுப்பன் மனம் கூட ரசனையில் ஆழ்ந்து ஆஹா இந்த உலகம் தான் எத்தனை இனியது என்று வியக்கத் தொடங்கிவிடும். ஆனால் அங்கேயும் கணேசனால் கவலையை மறக்க முடியவில்லை. அப்படி ஒரு மன பாரம்!

மனது திரும்பத் திரும்ப தற்கொலை முடிவையே நாடியது. எங்கிருந்து குதித்தால் வலிக்காமல் சாக லாம் என்றெல்லாம் கணக்கு போட்டுக் கொண்டிருந் தது. சந்தானமும் ஒரு முழுக்கு போட்டுவிட்டு வந்து சேர்ந்தான்.

"டேய் வாடா... போய் பஜ்ஜியும் டீயும் சாப்பிடு வோம்" என்று இழுத்துச் சென்றான்.

ஜேஜேவென்ற கூட்டத்துக்கு நடுவில் மரத்தடி ஒன்றில் டீக்கடை. பக்கத்திலேயே தமிழர்களின் தேசிய உணவாகிவிட்ட பஜ்ஜி வடை வாணலி எண்ணெயில் வெந்து கொண்டிருந்தது.

போய் நின்ற ஜோரில் ஒரு பேப்பரில் இரண்டு பஜ்ஜியை வைத்து நீட்டினார் கடைக்காரர்.

"புடிடா...." - என்று கணேசன் கையில் திணித்த சந்தானம் தனக்கென்று இரண்டு பஜ்ஜியை வாங்கிக் கடித்தபடியே அந்த காகிதத்தை கசக்கி எரியப் போனவன் அப்படிச் செய்யாமல் அந்த காகிதத்தை பார்த்தான். அது ஒரு டைரி தாள். 2006-ஆம் வருஷத்தின் ஏப்ரல் 14-ஆம் நாள் தாள் அது என்று மேலே பார்த்த உடனே தெரிந்துவிட்டது.

டைரியில் அதை வைத்திருந்தவரின் குறிப்பு களும் இருந்தது. அதை பஜ்ஜியை கடித்தபடியே படிக்கத் தொடங்கினான் சந்தானம்!

'இன்றைய தமிழ் புத்தாண்டை என்னால் மறக்கவே முடியாது. தென்காசிக்கு அக்காள் வீட்டிற்கு வந்த இடத்தில் சித்த வைத்தியர் சிங்க முத்துவின் சினேகம் கிடைத்தது. வைத்தியர் இன்று குற்றால மலைக்கு மேலே உள்ள புலியருவியை கடந்து அதற்கும் மேல் இருக்கும் அகத்திய சித்தர் கோவிலுக்கு போகப் போவதாக கூறினார். அப்படி அவரை சந்திக்க அவர் போனபோது நானும் அவரோடு சேர்ந்து கொண்டேன்.

அந்த பயணத்தை என்னால் மறக்கவே முடியாது. அடேயப்பா எவ்வளவு த்ரில்! கிட்டத்தட்ட மூன்று மணி நேரம் பயணம் செய்து அகத்தியர் கோவிலை அடைந்தோம். ஒரு மரத்தடியில் அகத்தியரின் சிலை இருக்கிறது. அதுதான் அகத்தியர் கோவில். அங்கே நாம் வேண்டிக் கொள்வது கட்டாயம் நடக்கும் என்றார் வைத்தியர். நானும் வேண்டிக் கொண்டேன். தங்கை நிர்மலாவுக்கு நல்லபடியாக திருமணம் ஆக வேண்டும். அதற்கு இடைஞ்சலாக இருப்பது தங்கம்தான். இருபது பவுன் கூட இல்லாமல் திருமணம் செய்ய முடியாத நிலையில் வீட்டில் எல்லாரும் சிரமப்படுவதை நான் வைத்தியரிடம் சொன்ன போது அவர் உனக்கு அதிர்ஷ்டம் இருந்தால் பைரவ சித்தர் தரிசனம் கிடைக்கும். அப்படி பைரவ சித்தர் தரிசனம் கிடைத்துவிட்டால் அவரே நீ கேட்கும் அளவு தங்கத்தை சாதாரணமாக தந்துவிடுவார் என்றார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது.'

- அந்த டைரியின் பின்பக்கத்திலும் குறிப்புகள் தொடர்ந்திருந்தது. சந்தானத் திடமும் ஒரு பரபரப்பு -

கணேசனும் கவனிக்க தொடங்கினான். சந்தானம் அந்த தாளின் பின்பக்கத்தை படிக்கத் தொடங்கினான். அதில் பஜ்ஜியின் எண்ணெய் ஊறி எழுத்துக்கள் சரியாக தெரியவில்லை. இருந்தும் ஓரளவு படிக்க முடிந்தது.

வைத்தியர் சிங்கமுத்து பைரவ சித்தரை சந்திக்கும் இடத்தை எனக்கு சொல்லி அங்கே போய் பைரவ சித்தரை மனதார ஆயிரத்தெட்டு முறைக்கு மேல் நினைத்து 'பைரவ சித்தாய வசிய வசிய ஸ்வாஹா, பைரவ சித்தாய தர்சன தர்சன ஸ்வாஹா' என்கிற மந்திரத்தையும் கூறினால் பைரவ சித்தர் நிச்சயம் தேடி வருவார். அவரிடம் நீ எவ்வளவு தங்கம் வேண்டுமோ கேட்டு வாங்கிக்கொள் என்றார். நானும் புறப்படத் தயாரானேன். அடுத்து வைத்தியர் சொன்னதுதான் பெரிதும் அதிர்ச்சிக்குரிய விஷயமாகும்.

பைரவ சித்தரை சந்திக்கச் செல்லும் இடத்திற்கு பெயர் புலி மேடு. அங்கே புலி நடமாட்டமுண்டு. புலி மேட்டு பாறை மேல் ஒரு கல் கோலம் பொறிக்கப் பட்டிருக்கும். அந்த கோலத்தின் மேல் அமர்ந்து கொண்டு கிழக்கு நோக்கி பார்த்து அவரை தியானிக்க வேண்டும். அப்படி தியானத்தில இருக்கும் போது புலிகள் வந்து அடித்துச் சாப்பிட்டு விடும் ஆபத்து மிகுதி! என்றார்.

நானும் திகைப்புடன் இது என்ன வைத்தியரே வில்லங்கம் என்று திருப்பிக் கேட்டேன். தங்கம் என்ன மரத்திலா காய்க்கிறது. அதை அடைய வேண்டும் என்றால் இந்த ரிஸ்க்கை எடுத்துத்தான் தீர வேண்டும்.

உயிருக்கு துணிந்தால்தான் தங்கம். இல்லாவிட்டால் இந்த குற்றாலம் செங்கோட்டை தென்காசியில் வீட்டுக்கு வீடு எல்லோரும் ஆயிரம் கிலோ தங்கத்தை வைத்திருப்பார்களே என்றார்.

அதுவும் உண்மைதான்! எனக்கும் தங்கம் தான் தேவை. எனவே உயிரை பணயம் வைத்து நான் புலி மேட்டுக்குப் போய் அந்த கல்கோலத்திலும் அமர்ந்து விட்டேன். பைரவ சித்தரை இடைவிடாது நினைக்கத் தொடங்கினேன். அதேசமயம் புலி உறுமும் சப்தமும் கேட்டது!

- என்கிற வரிகளோடு அந்த டைரி பக்கம் முடிந்துவிட்டிருந்தது. சந்தானம் முகத்திலும் ஒரு ஏமாற்றம் கணேசனும் அதை படித்தவனாக சற்று பரபரப்போடு சந்தானத்தை பார்த்தான்.

"என்ன பாக்கறே?"

"ரொம்ப இண்ட்ரஸ்ட்டா இருக்கு இல்ல இந்த டைரி."

"எவனோ கதை எழுதியிருக்கான்."

"எனக்கு அப்படி தெரியல....."

"இந்த குற்றால மலை பத்தி நிறைய கதைங்க உண்டு. நான் இதை அப்படிதான் நினைக்கறேன்."

"கதையை யாராவது டைரியில எழுதுவாங்களா?"

"அப்ப நீ இதை நம்பறியா?"

"இதோட அடுத்த பக்கத்தை பார்த்தா அப்புறம் என்ன நடந்ததுன்னு தெரிஞ்சிட்டு போகுது."

- இடுப்பில் துண்டுடன் காய்ந்துவிட்ட உடலுடன் அடுத்த பக்கத்துக்காக பஜ்ஜி கடைக்காரரை பார்த்தபோது அவர் பரபர வென்று அந்த டைரி தாளில் பல பக்கங்களை கிழித்து மற்றவர்களுக்கு அதில் பஜ்ஜியை கொடுத்து முடித்திருந்தார்.

"போச்சு போச்சு."

"என்னடா?"

"அந்த அடுத்த பக்கம்."

"போகட்டும் விடு. வா திரும்ப ஒரு குளியல் போட்டுட்டு வருவோம்."

"நீ போய்ட்டு வா. நான் இங்கேயே இருக்கேன்"

"புரியுது. உனக்கும் பணப்பிரச்சனை. சாமியார் தங்கம் தருவார்ன உடனே நமக்கும் கிடைச்சா பரவாயில்லையேன்னு நினைக்கறே."

"ஆமாம்.... நான்தான் எத்த தின்னா பித்தம் தெளியும்னு இருக்கேனே?"

"திரும்பவும் சொல்றேன். இதெல்லாம் சரியான டுபாக்கூர் விஷயம். இதை எல்லாம் நம்பாதே."

"நீ போய்ட்டு வா... அதுக்குள்ள இந்த பக்கத்தோட அடுத்த பக்கம் கிடைக்குதான்னு பாக்கறேன்."

- என்று சந்தானத்தை அனுப்பிய கணேசன் கீழே தரையில் பஜ்ஜி சாப்பிட்டு விட்டு கசக்கிப் போட்ட எல்லா பேப்பர்களையும் குனிந்து எடுத்து எல்லா பக்கங்களையும் விரித்து நேர்ப்படுத்திக் கொண்டான். அப்படியே கடைக்காரருக்கு தெரியாமல்

அவர் அந்த பக்கமாய் திரும்பிய சமயம் அந்த டைரியையும் எடுத்துக் கொண்டான். அதில் சில மாதங்களுக்கான எழுதப்பட்ட பக்கங்கள் இருந்தது!

கணேசனும் கூர்மையாக படிக்கத் தொடங்கினான்.

அவனுக்கு அதிர்ஷ்டம் இருந்தது. அந்த மறுபக்கம் கிடைத்துவிட்டது. அது தொடர்ந்தது.

'புலி உறுமும் சப்தம் கேட்டு நான் மெல்ல கண் திறந்தேன். என் எதிரில் ஒன்றுக்கு நான்கு புலிகள். எனக்கு உயிரே போய்விட்டது. அந்த பயத்தில் நான் அடுத்து சொல்ல வேண்டிய மந்திரங்களும் நினைவுக்கு வரவில்லை. அப்போது ஒரு புலி எனக்கு மிக முன்னால் வந்து நான் அமர்ந்திருந்த பாறை மேல் ஏற முற்பட்டு வழுக்கி கீழே விழுந்தது.

அந்த நொடி எனக்கு அந்த பைரவ சித்தருக்கான மந்திரம் நினைவுக்கு வந்து விட்டது.

'ஓம் பைரவ சித்தாய வசிய வசிய ஸ்வாஹா!
ஓம் பைரவ சித்தாய தர்சன தர்சன ஸ்வாஹா!'

- என்று நான் வேகவேகமாக கூறினேன். அடுத்த நொடியே அதிசயம் நடக்கத் தொடங்கியது. கையில் ஒரு கோலுடன் வெறும் கோமணம் மட்டும் கட்டிய நிலையில் ஒரு சித்தர் புலிகளை விரட்டிக் கொண்டே என் எதிரில் வந்தபடி இருந்தார். அவரைப் பார்த்த நொடி புலிகள் சிதறி ஓடிவிட்டன!

- என்று இருந்தது. மறுபக்கம் எண்ணெய் ஊறியதில் எழுத்துக்கள் முற்றாக அழிந்து சுத்தமாய் படிக்க முடியவில்லை.

கணேசனை பரபரப்பு மட்டுமில்லை ஆர்வமும் ஆசையும் கூட தொற்றிக் கொண்டது.

'யார் இந்த நபர்?

இவருக்கு அதன் பின் தங்கம் கிடைத்ததா?' என்கிற கேள்வி பிறந்து கணேசனை குடையத் தொடங்கியது. அதற்குள் சந்தானம் இன்னொரு முழுக்கு போட்டுவிட்டு வந்திருந்தான். சிலை போல அமர்ந்திருந்த கணேசனைப் பார்த்து "டேய் என்னடா இன்னும் அதே நினைப்பா தான் இருக்கியா?"

"ஆமாம். அடுத்த பக்கம் கிடைச்சிடுச்சு."

"அதுல என்ன இருந்துச்சு?"

"இதை எழுதுனவர் சித்தரை பார்த்துட்டாரு."

"பாக்கறது இருக்கட்டும். தங்கம் கிடைச்சிச்சா?"

"அது தெரியல...."

"சரி இப்ப நீ என்ன செய்யப் போறே?"

"இந்த உண்மையான்னு தெரிஞ்சிக்க போறேன்."

"இந்த பஜ்ஜி காகிதங்களை வெச்சுகிட்டு நீ உண்மை பொய்யை தெரிஞ்சிக்க போறியா?"

"இல்ல இந்த காகிதங்கள் இருந்த டைரி இப்ப என் கைல இருக்கு...."

"அடப்பாவி அந்த டைரிய சுட்டுட்டியா?"

"கடைக்காரன் வரைல இந்த டைரியோட மதிப்பு இதோட எடைக்கான காசு. மிஞ்சிப் போனா

கால் கிலோ இருக்காது.... ஒரு கிலோ பழைய பேப்பர் ஆறு ரூவா. அப்படி பார்த்தா இதோட மதிப்பு ஒண்ணரை ரூவா....”

“கணேசா.... நீ பேசறத பார்த்தா இதை சாதாரணமா நினைக்கலேன்னு நல்லா தெரியுது. நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதே. இப்படி அதிசயமான விஷயங்களை முதல்ல யாரும் டைரில எழுதி வக்க மாட்டாங்க. அப்படியே எழுதற பழக்கம் அவருக்கு இருக்குன்னே வெச்சிக்கிட்டாலும் டைரிய எவனாவது வீசைக்கு போடுவானா? யோசிச்சுப் பார்....” - சந்தானம் சரியாகத்தான் கேட்டான்.

கணேசனும் யோசிக்கத் தொடங்கினான்.

சுற்றிலும் கசகசவென்று கூட்டம்.

குளிப்பதற்கென்றே ஒரு ஊர். அங்கே வேறு சிந்தனைகளுக்கு இடமில்லாத மக்கள். ஆனால் அங்கேயும் அந்த ஊரையும் சூழலையும் மறந்த ஒருவன்.

ஆச்சரியம்தான்!

இ

‘காலமும் நேரமும் கூடிவந்தால்
காலடியில் சொர்க்கம் தெரியும்!’

–சித்தன் வாக்கு

குளியலின் அடுத்த கட்டம் மசாஜ். மண் சட்டிகளில் மூலிகை எண்ணெயுடன் மரக் கட்டை

களால் ஆன உருளி, மத்து, உலக்கை போன்ற கருவிகளுடன் அங்கங்கே சிலர்.

“சார் ஆயில் மசாஜ் சார்... ஆயில் மசாஜ்...”

- என்று அவர்கள் கூவி அழைத்திட சந்தானமும் நண்பர்களும் அவர்களிடம் உடம்பைக் கொடுக்கத் தயாராயினர்.

“எவ்வளவுப்பா மசாஜிக்கு...”

“முந்நூறு ரூவா சார்.”

“ரொம்ப ஜாஸ்தியா தெரியுதேப்பா.”

“அரை மணி நேரம் அரை லிட்டர் மூலிகை எண்ணை சும்மா இந்த உருளியை உடம்புல உருட்டி மத்தால மொத்தி சொர்க்கத்தையேல்ல சார் காட்டுவோம்....”

“அப்ப மசாஜிக்கு அப்புறமா ஜில்லுன்னு ஏத்திகிட்டா நல்ல இருக்கும்னு சொல்....”

“ஆமாம் சார். பனங்கள்ளா பார்த்து குடிச்சிட்டு படுத்தீங்கன்னா பத்து மணி நேரத்துக்கு அப்படி ஒரு தூக்கம் வரும் சார்....”

“ஆமா மசாஜெல்லாம் நீங்க தான் பண்ணுவீங்களா?”

“நாங்கதான்னா.....”

“இல்ல தடி தடியா ஆம்பளைங்களா இருக்கீங்களேன்னு கேட்டேன்.” - சந்தானம் என்ன கேட்க வருகிறான் என்பது புரிந்தது.

"சார் இது அசல் மசாஜ்... குத்தால மசாஜ்னா இதுதான். அந்த மசாஜ் மசாஜ் கிடையாது. இது உடம்புக்கு சுகம் தரும். அது நோய் தரும்... தேவையா?"

"அப்ப இருக்குன்னு சொல்லு."

"கிடையாது சார்.... அந்த மாதிரி பொழுக்கு வேண்டிய அவசியம் எங்களுக்கு கிடையாது" - என்று அந்த மனிதன் கோபமானான்.

"சரி சரி சும்மா கேட்டேன்...இந்தா" என்று பணத்தை தந்துவிட்டு அவன் அங்கு போட்டிருக்கும் மரப்பெஞ்சின் மேல் போய் உட்கார்ந்தான். எண்ணெய் வார்ப்பும் அதைத் தொடர்ந்து 'தபதபதபப' என்று தலையைத் தட்டுவதும் ஆரம்பமானது.

அந்த வேளையில் கணேசன் அந்த டைரியை பிரட்டிக் கொண்டு ஒரமாய் உட்கார்ந்திருந்தான். கூட வந்தர்களும் கவனித்துவிட்டு "ஆமா அது யார் டைரிடா.... அதை போய் படிச்சிக்கிட்டிருக்கான்" என்று கேட்க "அதை ஏன் கேட்கறே...அது ஒரு கதை" என்று சொல்லி சிரித்தான் சந்தானம்.

"என்னா கதை...?"

"கேட்டா நீ என்னை கல்லால அடிப்பே..."

"அப்ப முதல்ல சொல்லு."

"பஜ்ஜி கடைல இருநது அந்த டைரிய அவன் சுட்டுட்டான். அது யார் எழுதுனதோ என்ன எழவோ ஆனா உள்ள இருக்கற விஷயம் ஒரே மாயா ஜால கதை தான்னா பாத்துக்கயேன்...."

"என்ன ஹாரிபாட்டர் கதை மாதிரி இருக்கு தாக்கும்."

"கரெக்டர் சொன்னே.... அதுலதான விளக்கு மாத்தை கட்டிப் பிடிச்சுகிட்டு ராக்கெட்ல பறக்கற மாதிரி பறப்பாங்க. பறக்கறத பார்த்தா கண்ணுக்கு உண்மையா தெரியும். ஆனா அம்புட்டும் கிராஃபிக்ஸ்..."

"நீ ஜிலேபி சுத்தாம விசயத்துக்கு வா."

"என்னத்த வர்றது. சுருக்கமா சொல்றேன். இந்த குற்றால மலைக்கு மேல தங்கம் செய்யத் தெரிஞ்ச சித்தர் சாமி ஒருத்தர் இருக்காராம். அவரை ஒருத்தன் போய் பாத்த விசயம் அதுல இருக்கு."

- சந்தானம் சொன்ன விசயம் எண்ணெய் தேய்த்தபடி இருந்தவன் காதிலும் விழுந்து அவன் முகம் மாறியது. 'தபதபதப' வென தலையை தட்டிய படி இருந்தவன் "சார் என்ன சார் சொல்றீங்க... மலைல இருக்கற சாமியை இங்க இருக்கற ஒருத்தர் போய் பாத்தாரா?" என்று ஆர்வமாக கேட்டான்.

"ஆமா....அப்படித்தான் அந்த பஜ்ஜி கட்டுன பேப்பர்ல இருந்துச்சு."

"பஜ்ஜி கட்டுன பேப்பர்லயா?"

"ஆமாம்ப்பா...நீ ஏன் இவ்வளவு ஆர்வமா கேட்கறே?"

"அட நீங்க என்ன சார்... நாங்கல்லாம் அவர் கண்ணுல படமாட்டாரான்னு ஏங்கிக் கிட்டு இருக்கோம்...."

"அப்ப அவர் இருக்கிறது நிஜமா?"

"என்ன சார் கேள்வி இது..... அவரால எவ்வளவு பேருக்கு தங்கம் கிடைச்சிருக்கு தெரியுமா?"

"யோவ் என்னய்யா சொல்றே?"

"அத விடுங்க சார்...அதுல சாமியாரை சந்திக்கற மந்திரம் இருக்கா சார்...."

"மந்திரமா?" - சந்தானம் வாயைப் பிளந்தான்.

"ஆமாம் சார்.... அது தெரிஞ்சாதான் அவரை பாக்க முடியும்னு சொல்வாங்க...." - மசாஜ்காரன் கேட்கவும் டைரியில் மந்திர வரிகளை படித்ததும் சந்தானத்துக்கு நினைவுக்கு வந்தது. கூடவே சாமியார் விஷயம் பொய் இல்லை என்கிற எண்ணமும் மெல்ல ஏற்படத் தொடங்கியது. அவன் கேட்ட கேள்விக்கு பதில் கூறாமல் திரும்பி கணேசனை பார்த்தான். கணேசனோ புறப்பட்டுவிட்டிருந்தான்.

"டேய் கணேசா" - என்று கூப்பிட்டதும் அவன் காதில் விழவில்லை.

"என்ன சார் நான் கேட்டதுக்கு எதுவும் சொல்லாம இருக்கீங்களே...."

"மந்திரம் பத்தி கேட்டே இல்ல.....?"

"ஆமாம் சார். அது தான் சார் பெரிய விசயமே... இங்க அந்த மந்திரம் சிலருக்கு தெரியும். ஆனா லட்ச ரூபா தந்தாலும் சொல்ல மாட்டாங்க...."

"அப்ப எனக்கு தெரியும். லட்ச ரூவா தந்தா தான் சொல்வேன்னா லட்ச ரூவா தந்துருவியா?"

"உங்களுக்கு அப்ப தெரியுமா சார்....?"

"நீ என் கேள்விக்கு பதில் சொல்லு....."

"என்னாலல்லாம் அவ்வளவு ரூவா தர முடியுமா சார். ஆனா இங்க ஒரு சித்த வைத்தியர் இருக்காரு.

அப்புறம் ஒரு மர வியாபாரி இருக்காரு. இது போக பழைய எம்எல்ஏவும் அந்த மந்திரம் தெரிஞ்சா சொல்லு. பத்துலட்சம்னாலும் தரேன்னு சொன்னார் சார்..."

"அப்ப அந்த மந்திரம் தெரிஞ்சா தான் அந்த சாமியாரை பார்க்க முடியுமா?"

"சார் உங்களுக்கு தெரியுமான்னு மட்டும் சொல்லுங்க. நீங்க எனக்கு கூட சொல்ல வேண்டாம். நான் இப்பவே உங்கள வைத்தியர் கிட்ட கூட்டிகிட்டு போறேன். அவர் கிட்ட சொல்லுங்க அது போதும் எனக்கு...."

"அவர் பத்து லட்சம் தருவாரா?"

"கேட்டுப் பாருங்க."

"என்னய்யா சொல்றே.... நான் இதெல்லாம் ஏதோ சின்னப் புள்ளத்தனமான விசயம்னு நினைச்சு விளையாட்டா பேசினா இதை நீ லட்சக்கணக்குக்கு சொல்றே. அந்த மந்திரத்துல அப்படி என்னய்யா இருக்கு."

"அதை சொன்னாதானே சாமியார் வருவாரு...."

"இல்லாட்டி அவரை வேற விதத்துல பார்க்கவே முடியாதா?"

"ஆமாம் சார்... உங்களுக்கு என்ன சார் தெரியும். அவரை எப்படியாவது கண்டு பிடிச்சு தங்கம் பண்ண கத்துக்கிடணும்னு கொள்ள பேர் மலைக்கு மேலே போனாங்க. போன அவ்வளவு பேரும் மெண்டலா மாறி இப்ப சுத்திகிட்டிருக்காங்க. அதோ பாருங்க ஒரு

பைத்தியக்காரனை....” - எண்ணெய் மசாஜ் காரன் சற்று தூரத்தில் காகிதம் பொறுக்கியபடி சென்று கொண்டிருக்கும் ஒரு மனநலம் பாதிக்கப்பட்டவனை காட்டினான். கொஞ்சம் பகீரென்றது.

அருகிலிருந்த சந்தானம் நண்பர்கள் “டேய் சந்தானம் என்னடா இது..... பிள்ளையார் புடிக்க குரங்கான மாதிரி மேட்டர் எங்கெங்கியோ போவுது” என்று கேட்டனர்.

சந்தானம் வாயை திறக்கவில்லை.

தான் படித்த தாளில் இரு வரியில் இருந்த மந்திரம் பாதி ஞாபகம் வந்தது - மீதி ஞாபகம் வரவில்லை.

‘பைரவ சித்தாய வசிய வசிய ஸ்வாஹா!

பைரவ சித்தாய..... சித்தாய.....’ என்று அதற்கு மேல் உள்ள வார்த்தைகள் ஞாபகத்துக்கு வர மறுத்தது.

அவன் யோசிப்பதை பார்த்த மற்ற நண்பர்கள்

“என்னடா யோசிக்கறே.... இந்த விஷயத்தை இத்தோட விடுடா. சன்னதி தெரு கோமதி விலாஸ் அய்யர் கடைல நெய் தோசை சூப்பரா இருக்குமாம் - வாடா போய் ஒரு கட்டு கட்டுவோம்” என்று நண்பர்கள் அவனை கலைக்கப் பார்த்தனர்.

ஆனால் அவன் காதில் அதெல்லாம் விழவே யில்லை.

கணேசன் அடுத்து என்ன செய்தபடி இருப்பான் என்பதில்தான் அவன் எண்ண மெல்லாம் இருந்தது.

4

‘விதி விளையாடத் தொடங்கிவிட்டால்
மதி தடம் மாறத் தொடங்கிவிடும்!’

- சித்தன் வாக்கு.

குற்றாலம் விருந்தினர் மாளிகைக்கு பின்புறமாய் அந்த பெரிய மரம் இருந்தது. அதற்கு கீழே திம் மென்று குளிர் நிழல்! அந்த நிழலில் போய் அமர்ந்து கொண்ட கணேசன் டைரியையே நெடுநேரம் உற்றுப் பார்த்தான். உள்ளே கிட்டத்தட்ட ஆறேழு மாதங் களுக்கான பக்கங்கள் கிழிக்கப்பட்டு பஜ்ஜி வடை கட்டப்பட்டுவிட்டிருந்தன.

சொச்ச பக்கங்களில் அந்த டைரிக்குரியவர் யார் என்பது தெரியாத நிலையில் அவர் எழுதிய அன்றாட குறிப்புகள்!

அதில் ஒரு நவம்பர் மாத 23-ஆம் தேதி பக்கத் தில் உள்ள குறிப்பு கணேசனுக்கு பயன்படும்போல தோன்றியது.

‘இன்று என் சகோதரியின் திருமணம் நல்ல படியாக நடந்து முடிந்தது. எல்லாம் குற்றால மலை பைரவ சித்தரின் கருணை. அவர் மட்டும் கல்யாணத் துக்கு தேவைப்பட்ட தங்கத்தை தந்திருக்காவிட்டால் என் சகோதரி ராஜேஸ்வரிக்கு திருமணம் நடந்திருக் குமா என்பதே சந்தேகம். இவ்வேளையில் வைத்தியர் சிங்க முத்துவையும் நான் நன்றியோடு எண்ணிப் பார்க்க வேண்டும்.

அவரால் தானே பைரவ சித்தர் பற்றியே தெரிய வந்தது. அவர் மட்டும் தனக்கு தெரிந்த அந்த மந்திரத்தை எனக்கு கூறியிருக்கா விட்டால் நான் நிச்சயம் இந்த திருமணத்தை நடத்தியிருக்கவே முடியாது.

அதேசமயம் எந்த நிலையிலும் தங்கம் செய்யும் விதத்தை பைரவ சித்தர் சொல்லித்தர மறுத்து விட்டார். அந்த ரகசியம் என்ன சாதாரண ரகசியமா? அதுமட்டும் தெரிந்துவிட்டால் தான் நாம் இந்த உலகத்தையே வெற்றி கொண்டு விடலாமே.

இவ்வேளையில் சித்த வைத்தியர் சிங்கமுத்து சொன்னதுபோல பைரவ சித்தருடைய சீடராக சேர்ந்து விடுவது ஒன்றுதான் அந்த ரகசியத்தை அறிய முடிந்த ஒரே வழியாகும்.

இந்த திருமணச் சந்தடி அடங்கட்டும். அப்போது தெரியும் இந்த குமரேசன் யாரென்று... பைரவ சித்தரிடம் எப்படியாவது சீடனாக சேர்ந்து ரகசியத்தை எப்படியாவது கற்றுக் கொண்டே தீரவேண்டும்.' - என்று எழுதப்பட்டிருந்த அந்த பக்கத்துச் செய்தி கணேசனை மிகவும் நம்பிக்கை கொள்ள வைத்தது. அப்படியே அந்த டைரி யாருக்கு சொந்தம் என்பதும் தெரிந்துவிட்டது. டைரிக் குரியவர் பெயர் குமரேசன். இவரது சித்த வைத்தியர் சிங்கமுத்துவால் தான் பைரவ சித்தர் தரிசனம் கிடைத்துள்ளது.

சரி இந்த குமரேசனுக்கு எத சொந்த ஊர்?

அந்த ஊரில் குமரேசனின் முகவரி எது?

கணேசனுக்குள் அடுத்தடுத்த கேள்விகள் நெளிசலெடுத்தன. மற்ற பக்கங்களை படிப்பதில் அது தெரிய வருகிறதா பார்க்கலாம் என்று தொடர்ந்து படிக்க ஆரம்பித்தான்.

கணேசனின் நம்பிக்கை வீண் போகவில்லை.

டிசம்பர் மாதம் இருபதாம் தேதியிட்ட குறிப்பில் ஒரு வரியில் அந்த குமரேசனின் ஊர் தெரிய வந்தது.

இன்று மாப்பிள்ளையும் அக்காவும் அருப்புக் கோட்டை வந்துவிட்டு போனார்கள். அக்காவிடம் நான் நல்ல செழுமையைப் பார்த்தேன். திருமணம் பெண்களை அடியோடு மாற்றிவிடுகிறது. மனம் உடம்பு இரண்டுமே திருமணத்தால் பெரிய மாற்றத்துக்கு உள்ளாகிறது. இந்த மாற்றங்கள் ஆண்களிடம் பெரிய அளவில் ஏற்படுவதில்லை. பெண்களிடம் தான் அதிகம். அதற்கு சரியான காரணங்களும் உள்ளன. அவர்கள் வளரும்போதே இந்த வீடு உனக்கு சில காலத்திற்குத்தான். உன் உண்மையான வீடு உன் புகுந்த வீடு தான் என்று சொல்லிச் சொல்லியே வளர்க்கிறோம். அவர்களும் தாங்கள் வாழப் போகும் வீடு எப்படிப்பட்ட வீடாக இருக்குமோ என்கிற கேள்வியிலேயே வளர்கிறார்கள். அப்படி அவர்கள் செல்லும் வீடு பிறந்த தாய் வீட்டை விட எல்லா விதத்திலும் மேலானதான இருந்துவிட்டால் அவர்கள் மகிழ்ச்சிக்கு அளவே இல்லாமல் போய் உடம்பும் ஊதிப் பெரிதாகி விடுகிறது. நேர்மாறாக அமைந்தாலும் உடம்பு தான் பாதிப்புக்குள்ளாகிறது.

பெண் வாழ்க்கை என்பது இந்த மண்ணில் ஒரு சஸ்பென்சான நாவலைப் போல் இருப்பது எந்த வகையிலும் சரியில்லை. இந்த புகுந்த வீடு - பிறந்த வீடு கான்சஃப்ட்-ஐ வரும் காலத்திலாவது உடைத்து எல்லா வீடும் ஒரே வீடுதான் என்று மாற்றிக் காட்ட வேண்டும்.' - குமரேசன் டைரியில் இப்படி சிந்தனை களையும் பகிர்ந்து கொண்டிருந்தான். படிக்கப் படிக்க சுவையாகவும் இருந்தது. 'மொத்தத்தில் குமரேசனின் ஊர் அருப்புக்கோட்டை. அருப்புக்கோட்டை வாசி யான குமரேசனின் டைரி குற்றாலம் பஜ்ஜிக்கடைக்கு வந்தது எப்படி? இவ்வளவு தூரம் நாள் தவறாமல் டைரி எழுதும் பழக்கம் உள்ள ஒருவர் இப்படியா டைரியை வீசைக்கு போடுவார்?'

கணேசனுக்குள் கேள்விகள் சுழன்று அடித்தது.

'நிச்சயம் சாமியார் என்று ஒருவர் இருந்து தங்கமும் தந்திருக்கிறார். அதெல்லாம் உண்மை யாகத்தான் இருந்தாக வேண்டும். ஆனால் அப்படி ஒருவரை இந்த குமரேசன் அதன் பின் சந்தித்து சிஷ்யனாக சேர்ந்திருப்பாரோ? அதற்காக குற்றாலம் வந்த இடத்தில் தான் இனி எதற்கு இந்த டைரி என்று இதை தூக்கிப் போட்டிருக்க வேண்டும. இதுதான் நடந்திருக்க வேண்டும். இப்படி நடந்திருக்கத்தான் வாய்ப்பும் அதிகம்' என்று கணேசன் தனக்குள் கணக்கு போட்டபடி இருக்கும்போது அவனைச் சுற்றி அவன் நண்பர்கள்!

அவர்கள் பார்வையில் அனல்.

"உன்னை எங்கல்லாம் தேட்றது?"

"....."

"இந்த டைரி உன்னை கிறுக்கனாக் கிடிச்சின்னு நல்லா தெரியுது. இப்படி தனியா வந்து உக்காந்து படிச்சு அப்படி என்னத்த தெரிஞ்சுகிட்டே?"

"....."

"இவன் பேசமாட்டான்...நீ சொன்ன மாதிரி இவன் கிறுக்கன் ஆயிட்டான். ஒரு பஜ்ஜி கட்டின பேப்பர் இப்படி எல்லாம் கூட செய்யும்னு இப்பதான் நான் பாக்கறேன். நெஜமா சொல்றேன் - வெளிய சொன்னா யாரும் நம்ப மாட்டாங்க." - வந்து நின்ற நண்பர்கள் தங்கள் கருத்துக்களை ஆவேசமாக எடுத்து வைத்தார்கள். கணேசன் மௌனமாகவே இருந்தான். சந்தானம் மட்டும் அவர்கள் போல பேசி விடவில்லை. மௌனமாகவே இருந்தான்.

"சரி... நாங்கள்ளாம் நல்லா குளிச்சோம். சாப்ட்டோம். குற்றாலத்துக்கு எதுக்காக வந்தோமோ அது முடிஞ்சிச்சு. புறப்படப் போறோம். நீ இப்ப எங்க கூட வரப் போறியா இல்லை நாங்க கிளம்பவா?" - அவர்களில் ஒருவன் கட் அண்ட் ரைட்டாக கேட் டான். கணேசனும் நானும் வருகிறேன் என்பதுபோல எழுந்து கொண்டான். மௌனமாக அவர்களை தொடர்ந்து நடந்தான். அவனோடு சேர்ந்து நடந்த சந்தானத்திடம் மட்டும் சில கேள்விகள்.

"கணேசா.... டைரிய முழுசா படிச்சு முடிச் சிட்டியா?"

"எதுக்கு கேக்கறே?"

"இதுல என்ன இருக்குன்னு இவங்க யாருக்கும் தெரியாது. ஆனா எனக்கு தெரியும்."

"அதனால?"

"என்ன அதனால... இது மட்டும் உண்மையா இருந்தா நமக்கு புதையல் கிடைச்ச மாதிரி...."

"அப்ப நீ சந்தேகப்பட்றியா?"

"எப்படி சந்தேகப்படாம இருக்க முடியும்?"

"நான் நம்பறேன்."

"அப்ப நம்பற அளவுக்கு இதுல உனக்கு விசயங்கள் மேற்கொண்டு கிடைச்சிருக்குதுன்னு சொல்லு..."" ஆமாம்....."

"சரி... இவங்கள விட்டுடு. இந்த விஷயத்துல நான் உன் பக்கம்."

"எனக்கு யார் துணையும் தேவையில்லை."

"உனக்கு இந்த சுயநலம் ஆகாது கணேசா."

"நீ எப்படி வேணா சொல்லிட்டு போ...."

"அப்படி எல்லாம் நான் உன்னை விட்டுட மாட்டன்."

"என்ன பண்ணுவே?"

"இந்த டைரி தாளை முதல்ல படிச்சவன் நான். நான் படிச்ச தாள்ள தான் மந்திரம் இருந்துச்சு. அந்த மந்திரத்துக்கு மட்டுமே மதிப்பு எவ்வளவு தெரியுமா?"

"எவ்வளவு?"

"இப்ப போய் அந்த இரண்டு வரி மந்தரத்தை நான் ஒரு சித்த வைத்தியர் கிட்டயும், இந்த ஊர் மாஜி எம்எல்ஏ கிட்டயும் சொன்னாக்கா எனக்கு சுளையா 10 லட்சம் கிடைக்கும்."

"சொல்லி வாங்கிக்க வேண்டியது தானே?"

"கணேசா... என்னை டென்ஷன் ஆக்காதே. நான் இத பல கோடி சமாச்சாரமா நினைக்கறேன். அல்பமா பத்து லட்சத்துக்கு விக்க விரும்பல."

"அப்ப நீ இந்த விசயத்துல என்ன விட மாட்டே.... அப்படித்தானே?"

"அதுல எந்த சந்தேகமும் உனக்கு வேண்டாம்." - சந்தானம் பதில் கணேசனை வெகு ஆழமா யோசிக்க வைத்தது.

"என்ன திரும்ப யோசிக்கறே?"

"ஒண்ணுமில்ல.... இந்த விசயத்துல நிறைய உண்மைகளை தெரிஞ்சுக்க வேண்டியிருக்குது. அப்படி தெரிஞ்சுக்காம இதுல இறங்குறது சரி யில்லேன்னு நினைக்கறேன்.

"என்ன அந்த உண்மைங்க?"

"அத சொல்றதுக்கு முந்தி ஒரு விசயம்."

"என்ன?"

"நாம் கூட்டு சேர்ந்து இறங்கப் போற இந்த விசயம் பத்தி இங்க யாருக்கும் தெரியக்கூடாது."

"இதை நானே உன்கிட்ட சொல்ல ஆசைப் பட்டேன்."

"இங்க இவங்களுக்கு மட்டுமில்ல.... மத்த யாருக்கும்கூட தெரியக் கூடாது."

"தெரியாது. போதுமா?"

"போகட்டும். நாம ஒரு பெரிய விசயத்துல இறங்கப் போறோம். வெளிய இருந்து எந்த இடைஞ்சலும் வரக்கூடாது. அதனால...."

"அதனால?"

"ராவுத்தர்கிட்ட நான் பட்டுருக்கற கடனை உடனே அடைக்கணும். அப்பதான் என்னால இந்த விசயத்துல ஒரு தெளிவோட நிம்மதியா இறங்கி செயல்பட முடியும்."

"புரியது.... அந்த கடனை அடைக்க என் கிட்ட பணம் கேக்கறே....?"

"ஆமாம்.."

"உன் வரைல டைரி இப்பவே வேலை செய்ய ஆரம்பிச்சாச்சு."

"நான் மறுத்தா என்னை கழட்டி விடப் பார்ப்பே....அப்படித்தானே?"

"இல்ல...ஒரு உதவியாதான் கேக்கறேன். இந்த விசயத்துல நாம ஜெயிச்சு அந்த சாமியாரை பார்த்திட்டா இந்த பணம் எல்லாம் ஒரு சுண்டைக்காய் தானே?"

"அப்ப அவரை எப்படியாவது சந்திக்கறதுங்கற முடிவுக்கே வந்துட்டேன்னு சொல்லு...."

"ஆமா...ஒண்ணு அவரை சந்திப்பேன். பெரிய ஆளா ஆவேன். இல்ல அந்த காட்டுல சுத்தற புலிங்களுக்கு இரையாகிடுவேன்."

"இது வெறுப்புல பேசற பேச்சா - இல்லை வைராக்கியத்தோட பேசற பேச்சா?"

"இரண்டும்தான்." - கணேசனிடம் தெளிவாக இருந்தது பதில். அதற்கு மேல் சந்தானமும் பேச வில்லை.

அவர்கள் ஏறி வந்த வேனும் வந்து விட்டிருந்தது.

எல்லோரும் ஏறி அமர்ந்திட வேன் புறப்பட்டது. மெல்லிய சாரல் மழைக்குள் நனைந்தபடி வேன் சாலையில் வேகமெடுக்க உள்ளே கணேசனிடம் ஒரு புது நம்பிக்கை. அப்படியே திரும்பி குற்றால மலையைப் பார்த்தான்.

கம்பீரமாய் காட்சி தந்த அதன் ஒரு பாகத்தில் குற்றால அருவியில் அசுரப் பாய்ச்சல்!

ரம்மியமாக இருந்தது.

இந்த இயற்கையை போலவே இனி வாழ்வும் ரம்மியமாகுமா?

5

'தொலைந்தது கிடைக்க வேண்டும் என்றால்
தொலைத்த இடத்தில் தேடு!

- சித்தன் வாக்கு.

வீட்டு வாசலில் புல்லட் மோட்டாரின் சப்தம். ராவுத்தர் தான் அதில் வந்திருந்தார். அவர் இறங்கி வீட்டுக்குள் வந்த தோரணையே அலாதியாக இருந்தது. வாசலை தாண்டி உள்ளே வந்தவர் முன் பளிச்சென்று இரண்டு நோட்டுக் கட்டுகளை எடுத்து நீட்டினான்.

அதைப் பார்த்த மாத்திரத்தில் ராவுத்தரிட
ஒரு இன்பத் திகைப்பு.

"என்ன கணேசா பணம் கிடைச்சிடிச்சா!"

"கிடைக்காமதான் இப்ப தந்தேனா?"

"இதுல எவ்வளவு இருக்குது?"

"நாப்பதாயிரம்."

"அச்சா....கரெக்டர் பணம் கொடுத்துட்டியே
இனி நீ எப்ப கேட்டாலும் உனக்கு எவ்வளவு
னாலும் நான் பணம் தர தயாரா இருக்கேன்."

"நான் எதுக்கு இனிமே உன்கிட்ட கட
வாங்கப் போறேன். நீ என்கிட்ட கேட்காம இருந்த
போதாது."

"அப்போ உனக்கு இனி பணக்கஷ்ட
வராதுன்னு சொல்லு."

"நீ புறப்படு. உன்கிட்ட நான் இவ்வள
பேசினதே ஜாஸ்தி." - ராவுத்தருக்கு முகம் சற்
வாடிப் போனது. திரும்பித் திரும்பி பார்த்தபடி
சென்று புல்லட் பைக்கில் ஏறி அமர்ந்தான். அதுவும்
அதற்கே உண்டான சப்தத்தோடு விலகிப் போனது.

கணேசன் மனைவி சுலோச்சனா ஆச்சரியமா
பார்த்தபடி இருந்தாள். "நீங்க குற்றாலத்துல இருந்
வந்ததுல இருந்தே ரொம்ப மாறிட்டீங்க.... இந்
பணம் எப்படி வந்துச்சுன்னு கேட்டாலும் சொல்
மாட்டேங்கறீங்க...."என்றாள்.

"சுலோச்சனா...என்னை இப்ப எதுவும்
கேட்காதே. சாமிய நல்லா கும்புட்டுக்கோ. நான் ஒ

பெரிய விஷயத்துல இறங்கப் போறேன். அதுல நான்
ஜெயிச்சிட்டா உன் கழுத்துல சும்மா இருக்கும்போது
கூட நூறு பவுன் தொங்கும்."

"அது எப்படிங்க?"

"தொங்கத்தானே போகுது - பாக்கத் தானே
போறே...."

"கடத்தல் அப்படி இப்படின்னு ஏதாவது
பண்ணப் போறீங்களா?"

"சத்யத்துக்கும் தர்மத்துக்கும் விரோதமா நான்
எந்த காலத்துலயும் நடந்துக்க மாட்டேன்."

"அப்புறம் எப்படிங்க?"

"அதை நான் இப்ப சொல்ல விரும்பல. நீ சாமிய
கும்புட்டுக்க... நான் போற காரியம் நல்லபடியா
முடியணும்னு."

"நிச்சயமாங்க....உங்கள இப்படி சந்தோஷ
மாவும் தெம்போடையும் பார்த்து ரொம்ப நாளாச்சு.
எனக்கு அதுவே சந்தோஷமா இருக்கு." என்றாள்
சுலோச்சனா.

அதே வேளையில் வாயில்புறம் சந்தானம் தன்
மாருதி காரில் வந்தவனாக ஹாரன் அடித்தான்.

"சந்தானம் வந்துட்டான். நான் கிளம்பறேன்"
என்றவனாக மறக்காமல் அந்த டைரியையும் எடுத்துக்
கொண்டு வேகமானான்.

சுலோச்சனா மலங்க மலங்க பார்த்தாள்.

அந்த கார் அருப்புக்கோட்டை நோக்கி ஓட
தொடங்கியது. டிரைவிங் சீட்டில் சந்தானம்,

"இப்ப நாம அருப்புக்கோட்டை போய்
அங்க குமரேசன்கற நபரை ட்ரேஸ் பண்றோம்.
இது அந்த குமரேசன் எழுதின டைரி" - என்றான்
கணேசன்.

"இதை எழுதினவன் குமரேசன்னு எப்படி
கண்டுபிடி;சசே?"

"இதை படிச்சுப் பார்த்துதான்."

"எங்கேயாவது குமரேசன்னு கையெழுத்து
போட்டுருக்கா."

"கையெழுத்து போடல.... அழகா குறிப்பிட்
டிருக்கார்...."

"சரி.... அருப்புக்கோட்டையில அவரை எந்
கன்னு தேடி கண்டு பிடிக்கறது....?"

"அதான் எனக்கும் தெரியல.... நீ தான் கொஞ்சம்
யோசியேன்."

"அட என்ன கணேசா நீ... வைக்கப் போருக்
குள்ள குண்டூசிய தேட்ற கதையால்ல அப்புறம்
இருக்கும்?"

"உண்மைதான்.... ஆனா நாம எப்படி யாவது
கண்டுபிடிக்கணும். கண்டுபிடிச்சு அந்த நபர்கிட்ட
இந்த டைரிய காட்டி திருப்பி ஒப்படைக்கணும்
அப்படியே அவர் சித்தரை சந்திச்சது பத்தி கேட்டு
நமக்கும் வழிகாட்ட சொல்லணும்."

"ஏன்... நாமே அந்த மலைக்கு போய் அந்த
பைரவ சித்தர் வந்துட்டு போற இடத்தை கண்டு
பிடிக்க முடியாதா?"

"அப்ப நீ இந்த டைரிய முழுசா நம்பறே - இதுல
உள்ள எந்த தகவலும் பொய் இல்லேன்னும் ஒத்துக்
கறே அப்படித்தானே?"

"அப்ப நீ நம்பாமதான் இது உண்மையான்னு
தெரிஞ்சுக்கப் போறியா?"

"அதை தாண்டி வேற ஒரு காரணமும்
இருக்குது...."

"என்ன....?"

"இப்ப நீ எதுக்கு என் கூட வரே?"

"நான் உன்னை கேட்டதுக்கு பதிலுக்கு
என்னைக் கேட்டு ஆழம் பாக்கறியா?"

"சந்தானம்.... நான் இப்ப ரொம்ப சீரியசான
கண்டிஷன்ல உன்கிட்ட பேசிக் கிட்டிருக்கேன். தயவு
செய்து நான் கேட்ட கேள்விக்கு எது உண்மையான
பதிலோ அதை சொல்லு."

"இதுக்கு நான் என்னத்த சொல்ல.... உனக்கு
உதவி செய்யறதுக்குன்னு வெச்சுக் கையேன்."

"உண்மையான பதிலை சொல்லச் சொன்
னேன்."

"உண்மையான பதில்.... உண்மையான பதில்...."

"நான் சொல்றேன் - உனக்கும் தங்கம் வேணும்...
அவ்வளவுதான்."

"உம்.... வெச்சுக்கோ...."

"என்ன வெச்சுக்கோ... அதானே நிஜம்."

"அதுல என்ன தப்பு....சாமியார்கிட்ட தானே இரண்டு பேருமே கேட்க போறோம்."

"எல்லாம் சரி.... நீ என் கூட வர்றதும் தங்கத்துக்காகதான்... அத ஒத்துக்கோ."

"சரி ஒத்துக்கறேன் - அதுக்கென்ன இப்போ?"

"தங்கம்ன உடனே அது உண்மையோ பொய்யோ ஒரு வேகம் ஏற்படுது. பொய்யா இருந்தாலும் அது உண்மையா இருந்தா நல்லா இருக்கும்னு தோணுது இல்லையா?"

"அதுல என்ன சந்தேகம்... தங்கம்தானே இன்னிக்கு சர்வதேச செலாவணி.... எவ்வளவு தான் விலைவாசி உயர்ந்தாலும் எந்த நகைக்கடைல கூட்டம் குறைஞ்சிருக்கு?"

"பாய்ண்ட்டுக்கு வா.... நான் சாமியாரை பாக்கப் போறது தெரிஞ்சு நம்பிக்கையே இல்லாத நீ என் கூட வந்திருக்கற மாதிரி இந்த குமரேசன் கூடயும் யாராவது வந்திருக்கலாம் இல்லையா?"

"அதனால?"

"இது முதல்ல எந்த அளவுக்கு ரகசியம்னு தெரியணும் எனக்கு? அடுத்து இந்த குமரேசன் தங்கத்தை வாங்கிட்டு ஒரே தடவையோட விட்டுட்டாரா இல்லை தொடர்ந்து பைரவ சித்தரை போய் பார்த்தாரான்னு தெரியணும்."

"இதெல்லாம் தெரியறதால நமக்கென்ன பிரயோஜனம்?"

"இருக்கு.... என்கைல கிடைச்ச டைரி அஞ்சாறு வருஷத்துக்கு முந்தைய டைரி. இந்த ஆறு வருஷத்துல பைரவ சித்தர் விஷயம் அப்படியே தான் இருக்கான்னு தெரியணும்."

"புரியுது... இந்த குமரேசன் மாதிரி பலரும் தங்க ஆசையோட பைரவ சித்தரை பார்க்கப் போய் அந்த சித்தரே அந்த மலையை விட்டே ஓடிப்போயிருக்கலாம்னு நினைக்கறே?"

"அதுவும் ஒரு காரணம். உண்மையான காரணம் இவ்வளவு ரகசியமான விஷயத்தை உடைய டைரியை குமரேசன் எப்படி தொலைச்சாருன்னும் தெரியணும்."

"மொத்தத்துல மலை ஏறி பைரவ சித்தரை சந்திக்கறதுக்கு முந்தி கீழ அவரால ஏற்பட்ட எல்லா விதமான பாதிப்புகளையும் தெரிஞ்சுக்க விரும்பறே... அப்படித்தானே?"

"ஆமாம்...."

"ஒரு வகைல சரிதான். பஜ்ஜி சாப்பிடும் போது கிடைச்ச ஒரு டைரிய நம்பி வாழ்க்கையை பணயம் வைக்க முடியுமா என்ன?"

"விசாரிச்சதும் யோசிச்சதும் போதும் - குமரேசனை அருப்புக்கோட்டைல எப்படி கண்டு பிடிக்கறது... அதுக்கு ஒரு ஐடியா சொல்லு....."

- கணேசன் நிமிண்ட சந்தானம் தீவிரமாக யோசிக்கத் தொடங்கினான். காரில் எஃப்.எம்.

ரேடியோவில் ஒரு தங்க நகை கடை விளம்பரத்துக்
காக பிரபு புரட்சி செய்ய சொல்லிக் கொண்டிருந்தார்.

சந்தானத்துகும் சட்டென்று ஒரு ஐடியா
உதித்தது.

"கணேசா ஒரே வழிதான் நமக்கிருக்கு.
டெலிபோன் டைரக்டரியில அருப்புக் கோட்டைல
எவ்வளவு குமரேசன் இருக்கான்னு பாத்து அந்த
லிஸ்ட்ட வெச்சுகிட்டு கண்டு பிடிக்கலாம்" என்றான்.

கணேசனும் மறுக்கவில்லை.

"ஒரு விதத்துல இதுவும் நல்ல ஐடியாதான்."
என்றான்.

6

'பாவம்தான் கர்மமாகிறது
கர்மம்தான் விதியாகிறது!'

– சித்தன் வாக்கு

ரொப் பெரிய அந்த பங்களா கட்டிடம் பரபரப்பாக வளர்ந்து கொண்டிருந்தது. இருபது பேருக்கு பக்கமாய் வேலை பார்த்துக் கொண்டிருக்க அதில் அந்த இளம் பெண் மிக வித்யாசமாக தெரிந்தாள்.

நல்ல லட்சணமான களையான முகம். சிவந்த நிறம். ஆனால் அவள் தலையில் செங்கல் சுமை. அவளை மேஸ்திரியும் ஓரம் சாரமாக ரசித்துக் கொண்டிருந்தான். அதை சாந்து பூசும் கொத்தனார்

ஒருவர் பார்த்துவிட்டு தனக்கு பக்கத்தில் கலவை போட்டபடி இருக்கும் சித்தாளிடம் "மேஸ்திரி இன்னிக்கு செருப்படி வாங்காம வீட்டுக்கு போகப் போறதில்ல" என்றான்.

"அந்த புள்ளையை ஓவரா ரூட் உட்றானோ?"

"பின்ன.... ஒரு கெழவி கலரா புடவை கட்டு னாலே அதை பாத்து பெருமூச்சு விடுவான். இதுல இந்த பொண்ணு தளதளன்னு தக்காளி மாதிரில்ல இருக்கா...."

"ஹ்ம் இது தலையெழுத்து. இப்படி இங்க கல்ல தூக்கி பொழைக்கணும்னு இருக்குது. படிச் சிருக்கற படிப்புக்கு எங்கை யாச்சும் கணக்கெழுத வாச்சும் போகலாம்ல?"

"நான் சொல்லி பாத்துட்டேன். ஆனா அது கேக்கல. வாயத்திறந்தும் பதில் சொல்ல மாட்டேங் குது...."

- இருவரும் தங்களுக்குள் பேசியபடியே கலவையை சுவற்றில் பூசி மட்டப் பலகையால் தேய்த்து மட்டப்படுத்திக் கொண்டிருந்தனர்.

அதேசமயம் அவர்கள் எதிர்பார்த்ததும் நடந்துவிட்டது. மேஸ்திரி கன்னத்தில் அந்த பெண் ஓங்கி ஒரு அறை விட்டிருந்தாள். அறைந்த வேகத்தில் இங்கேயும் இனி வேலை பார்க்க வழியில்லை என்பதுபோல் சேலைத் தலைப்பால் முகத்தை துடைத்துக் கொண்டே புறப்பட்டு விட்டிருந்தாள்!

அந்த மேஸ்திரியும் சிவந்த கண்களுடன் பார்த்தபடி இருந்தான். உதட்டில் முணுமுணுப்பு.

"அதான் புருசன்காரனை புலி அடிச்சி தின்னு டிச்சே இன்னும் என்ன வீராப்பு. போடி போ... நீ எங்க போயிடுவே... எங்க போனாலும் என்னை மாதிரி ஆளுங்கதான் எல்லா இடத்துலயும் இருக்காங்க" என்று அவன் சொன்னதில் மட்டும் நிறையவே உண்மை இருந்தது!

டெலிபோன் டைரக்டரியில் கிட்டத்தட்ட பத்து பதினைந்து குமரேசன்கள் இருந்தனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் போன் செய்து பேச முற்பட்டான் சந்தானம்.

"ஹலோ குமரேசன் சாருங்களா?"

"ஆமா... நீங்க யாரு?"

"நான் யாருங்கறது இருக்கட்டும். உங்களுக்கு டைரி எழுதற பழக்கம் உண்டுங்களா?"

"அப்படின்னா?" - அந்த கேள்வி கேட்ட மறுநொடி போனை கட் செய்த சந்தானம் "கணேசா முதல் நபர் நாம தேட்ற நபர் இல்லை" என்றான்.

"எப்படி கண்டுபிடிச்சே?"

"டைரி எழுதற பழக்கம் இருக்கான்னு கேட்ட துக்கு அப்படின்னான்னு திருப்பிக் கேட்கறான்."

"ரைட் அடுத்த நபருக்கு ட்ரை பண்ணு...." சந்தானத்தின் கைகள் தன் செல்போனில் மிக வேகமாக இயங்கியது. அடுத்த மனிதர் சந்தானம்

கேள்விக்கு "அந்த பழக்கமெல்லாம் கிடையாதுங்க. எதுக்கு கேக்கறீங்க?" என்று கேட்டார்.

"இல்ல... டைரி எழுதற பழக்கம் இருந்தா அவங்களை ஊக்கப்படுத்தவும் அவங்களோட ஒரு நாள் டைரிக் குறிப்பை எங்க எஃப் எம் ரேடியோவுல வாசிக்கச் சொல்லவும்தான்...." என்று சமாளித்தான். கணேசன் சந்தானத்தின் சமயோசித அறிவை ரசித்தான்.

"அப்ப நீ எஃப் எம் ரேடியோவுல இருந்து பேசறேன்னு சொல்லு..."

"அப்ப தானே நம்ம கேள்விக்கு கோவிச்சுக்காம பதில் சொல்வாங்க."

சந்தானம் எதிர் பார்த்தது வீண் போக வில்லை.

எல்லா குமரேசன்களும் தெளிவாக பதில் கூறினர். அவர்களிடம் மறக்காமல் நீங்கள் "குற்றாலம் பக்கம் போய் குளித்திருக்கிறீர்காள?" என்றும் கேட்டான். தயங்காமல் பதில் கூறினர்.

இறுதியில் அவர்கள் யாருமே தான் தேடும் நபர் இல்லை என்பதாகத்தான் நினைக்க வேண்டி இருந்தது.

"கணேசா. இந்த டெலிபோன் டைரக்டரி மூலம் ட்ரை பண்ணது வேஸ்ட்டுடா...வேற ஏதாவது வழி இருந்தா சொல்லேன்..." - என்றான் சந்தானம். காரின் டேஷ் போர்டில் அந்த டைரி பாதி கிழிக்கப்பட்டு மீதி தாள்களோடு சந்தானம்.

முகத்தில் தீவிர சிந்தனை....

அந்த மேஸ்திரியும் சிவந்த கண்களுடன் பார்த்தபடி இருந்தான். உதட்டில் முணுமுணுப்பு.

"அதான் புருசன்காரனை புலி அடிச்சி தின்னு டிச்சே இன்னும் என்ன வீராப்பு. போடி போ... எங்க போயிடுவே... எங்க போனாலும் என்னை மாதிரி ஆளுங்கதான் எல்லா இடத்துலயும் இருக்காங்க" என்று அவன் சொன்னதில் மட்டும் நிறையவே உண்மை இருந்தது!

டெலிபோன் டைரக்டரியில் கிட்டத்தட்ட பத்து பதினைந்து குமரேசன்கள் இருந்தனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் போன் செய்து பேச முற்பட்டான் சந்தானம்.

"ஹலோ குமரேசன் சாருங்களா?"

"ஆமா... நீங்க யாரு?"

"நான் யாருங்கறது இருக்கட்டும். உங்களுக்கு டைரி எழுதற பழக்கம் உண்டுங்களா?"

"அப்படின்னா?" - அந்த கேள்வி கேட்ட மறுநொடி போனை கட் செய்த சந்தானம் "கணேசா முதல் நபர் நாம தேட்ற நபர் இல்லை" என்றான்.

"எப்படி கண்டுபிடிச்சே?"

"டைரி எழுதற பழக்கம் இருக்கான்னு கேட்ட துக்கு அப்படின்னான்னு திருப்பிக் கேட்கறான்."

"ரைட் அடுத்த நபருக்கு ட்ரை பண்ணு...." சந்தானத்தின் கைகள் தன் செல்போனில் மிக வேகமாக இயங்கியது. அடுத்த மனிதர் சந்தானம்

கேள்விக்கு "அந்த பழக்கமெல்லாம் கிடையாதுங்க. எதுக்கு கேக்கறீங்க?" என்று கேட்டார்.

"இல்ல... டைரி எழுதற பழக்கம் இருந்தா அவங்களை ஊக்கப்படுத்தவும் அவங்களோட ஒரு நாள் டைரிக் குறிப்பை எங்க எஃப் எம் ரேடியோவுல வாசிக்கச் சொல்லவும்தான்...." என்று சமாளித்தான். கணேசன் சந்தானத்தின் சமயோசித அறிவை ரசித்தான்.

"அப்ப நீ எஃப் எம் ரேடியோவுல இருந்து பேசறேன்னு சொல்லு..."

"அப்ப தானே நம்ம கேள்விக்கு கோவிச்சுக்காம பதில் சொல்வாங்க."

சந்தானம் எதிர் பார்த்தது வீண் போக வில்லை.

எல்லா குமரேசன்களும் தெளிவாக பதில் கூறினர். அவர்களிடம் மறக்காமல் நீங்கள் "குற்றாலம் பக்கம் போய் குளித்திருக்கிறீர்காள?" என்றும் கேட்டான். தயங்காமல் பதில் கூறினர்.

இறுதியில் அவர்கள் யாருமே தான் தேடும் நபர் இல்லை என்பதாகத்தான் நினைக்க வேண்டி இருந்தது.

"கணேசா. இந்த டெலிபோன் டைரக்டரி மூலம் ட்ரை பண்ணது வேஸ்ட்டுடா...வேற ஏதாவது வழி இருந்தா சொல்லேன்..." - என்றான் சந்தானம். காரின் டேஷ் போர்டில் அந்த டைரி பாதி கிழிக்கப்பட்டு மீதி தாள்களோடு சந்தானம்.

முகத்தில் தீவிர சிந்தனை....

"வேற எப்படி அந்த ஆளை புடிக்கலாம்னு பாக்கறியா?"

"ஆமாம்...." - என்றபடியே பக்கங்களை புரட்டி னான். ஒவ்வொரு பக்கமும் ஒவ்வொரு விதமான செய்திகள். ஒரு பக்கத்தில் 'இன்று பேங்க்கில் நகை அடகு வைக்க நிறைய பேர் வந்தனர். அருப்புக் கோட்டையிலேயே குறைந்த வட்டிக்கு எனது வங்கி தான் கடன் தருகிறது. அதனால் எப்போதும் கூட்டம் அதிகம்' என்கிற செய்தி கணேசன் முகத்தில் ஒரு புது நம்பிக்கையை கொளுத்திப் போட்டது.

"என்ன கணேசா?"

"ஒரு க்ளு கிடைச்சிருக்கு."

"எப்படி?"

"அருப்புக்கோட்டையில் குறைந்த வட்டிக்கு கடன் தர்ற பேங்க் எது?"

"அந்த பேங்க்குக்கு என்ன?"

"இந்த குமரேசன் அந்த பேங்க்குலதான் வேலை பார்க்கறார்."

"அப்ப அதை கண்டுபிடிக்கறது ரொம்ப சுலபம். இந்த காலத்துல அடகு வைக்காதவங்க யார்? பப்ளிக்கை கேட்டாலே தெரிஞ்சிடும்."

- என்றவன் வெயிலுக்கு குடை பிடித்தபடி வரும் ஒரு பெரியவரிடம் சென்று மரியாதையாக அறிமுகம் செய்து கொண்டு "நாங்க நகை அடகு வைக்கணும் குறைஞ்ச வட்டிக்கு பணம் தர்ற பேங்க் இந்த ஊர்ல இருக்காமே?" என்றிட அவரும் "நம்ம கூட்டுறவு பேங்க் சொல்றீங்களா?" என்று திருப்பிக் கேட்டார்.

"அப்ப கூட்டுறவு பேங்குலதான் வட்டி குறைவா?"

"எனக்கு தெரிஞ்சு அங்க தான்..."

"கணேசா காரை கூட்டுறவு பேங்குக்கு விடு" என்று அடுத்த நொடியே உற்சாகமானான் சந்தானம்.

7

'கூடவே வருவது நம் நிழல் மட்டுமல்ல,
நம் பாவமும்தான்'

- சித்தன் வாக்கு.

கூட்டுறவு வங்கியின் மேனேஜர் பழைய கால மனிதர் என்பது அவர் மூக்குக் கண்ணாடியிலேயே தெரிந்தது. அவ் வளவு பட்டையான ஒரு கண்ணாடியை அவர் இனி எந்த காலத்திலும் வாங்க முடியாது.

அவர் பெயரும் விசித்திரமாக இருந்தது.

வாரணம் உடையான்!

"உங்க பேருக்கு அர்த்தம் என்னங்க?" என்று சிரித்துக் கொண்டே கேட்டுவிட்டான் சந்தானம்.

"நீங்க வந்த விஷயத்தை சொல்லுங்க."

"இங்க குமரேசன்னு யாராவது ஒர்க் பண் றாங்களா? - சந்தானம் கேட்ட நொடி அவர் பார்வை அவர்கள் இருவரையும் ஊடுருவியது.

"என்ன அப்படி பாக்கறீங்க?"

"ஏன் நீங்களும் தங்கத்துக்காக அவன் கிட்ட பணம் கொடுத்திருக்கிங்களா?"

"தங்கத்துக்காக பணமா... புரியலியே?"

"அப்ப அவனை எதுக்கு தேடி வந்திருக்கிங்க?"

"அது... அது..."

"எது? அவன் செத்துப்போய் நாலு வரு மாச்சு. இப்பவும் உங்கள மாதிரி அவனை தேடி கிட்டு வர்றீங்கன்னா நான் என்னத்த சொல்லு?"

"என்னது.... குமரேசன் இறந்துட்டாரா?"

"அது கூட தெரியாதா உங்களுக்கு?"

"தெரிஞ்சா எதுக்குங்க உங்ககிட்ட அவ இருக்காரான்னு கேட்டு வர்றோம்?"

"சரி.... நீங்க எதுக்காக செத்துட்ட அவனை தேட்றீங்க. அதை சொல்லுங்க..."

"அது.... அது...." சந்தானம் அதற்கு பதி சொல்லத் தெரியாமல் இழுத்திட, கணேசன் இவ யில் புகுந்து சமாளிக்கத் தொடங்கினான்.

"சார்... குமரேசன்கிட்ட நான் தங்கத்துக் பணம் கொடுத்திருந்தேன்... அதான்..." - கணேசனி பதிலை கேட்டு மேனேஜரும் "அதானே பார் தேன்..." என்று சிரித்தார். சந்தானம் கணேசனை பதிலுக்கு பார்க்க கணேசனும் ஜாடை காட் அமைதியாக இருக்கச் சொன்னான்.

அவர் தொடர்ந்து கேட்கத் தொடங்கினார்.

"நீங்க எவ்வளவு தந்தீங்க?"

"அம்பதாயிரம்...."

"அம்பதாயிரமா...பரவால்ல...இங்க அவனை நம்பி அஞ்சு லட்சம் பத்து லட்சம் கொடுத்தவங் கள்ளாம் இருக்காங்க."

"அப்ப யாருக்குமே குமரேசன் தங்கம் தரலியா?"

"தங்கமாவது பித்தளையாவது? அவன் தான் ஊரை ஏமாத்தியிருக்கான்னா உங்களுக்குமா புத்தி யில்ல... ஆமா நீங்கல்லாம் படிச்சவங்கதானே?"

"என்னைய்யா சொல்றீங்க...?"

"நான் என்னத்த சொல்றது. யாரோ ஒரு சித்தர் தங்கம் செய்ய கத்துத் தரேன்னு சொல்லிட்டாரு. அவரு கட்டாயம் கத்து தருவாரு - நானும் இரும்பை தங்கமாக்கு வேன்னு அவன் உளறினதை நீங்கள்ளாம் இப்படியா நம்புவீங்க?"

"நம்பற மாதிரி அவர் நடந்துக்கிட்டாரே?"

"என்னத்த நடந்துக்கிட்டான்... எல்லாம் பேராசை! அந்த வீணாப்போன சித்த வைத்தியன் சிங்க முத்து பண்ண வேலை..."

"அது யாருங்க சிங்கமுத்து...?"

"யாரா... அப்படியே வெளிய போய் மாரி யம்மன் கோவில் வாசல்ல பாருங்க. காலு கைலல் லாம் சங்கிலியால கட்டி ஒருத்தனை கோவில் வாசல்ல உக்கார வெச்சிருப்பாங்க. அந்த ஆள் தான்...."

"சங்கிலி எதுக்கு?"

"பைத்தியத்த சங்கிலியாலதான கட்டிப் போ
முடியும்?"

"அவர் பைத்தியமா?"

"ஆமா... அவர் பைத்தியமானார்..... இவ
அந்த மலைக்காட்டுல புலிங்க அடிச்சே தின்னுடிச்
இங்க நானும் உங்கள மாதிரி வர்றவங்களுக்கு பதி
சொல்லியே அலுத்துப் போயிட்டேன்."

"குமரேசனுக்கு பெண்டாட்டி பிள்ளை
கன்னு...."

"பொண்டாட்டி இருந்தா... பேர் ராஜே
வரியோ மகேஸ்வரியோ - சரியா தெரியல! உங்க
மாதிரி பணம் கொடுத்தவங்களுக்கு பயந்துகிட்டே
தலை மறைவு வாழ்க்கை வாழ்ந்துக்கிட்டிருக்கா...."

"சார் எங்களுக்காக அவங்க எங்க இரு
பாங்கன்னு சொல்ல முடியுமா?"

"தலை மறைவு வாழ்க்கை வாழறாங்கறேன்
என்கிட்ட போய் அட்ரஸ் கேட்கறீங்க."

"சரி இவங்க எதுக்கு தலைமறைவா வாழணும்?"

"பின்ன... புருஷன்காரன் தங்கம் பண்ண
தரேன்ன லட்சக்கணக்குல வாங்குன பணம்லா
எங்க போச்சுன்னு உங்களுக்கு தெரியுமா - இல்
எனக்கு தான் தெரியுமா? பொண்டாட்டி காரிக்
தானே தெரியும்?"

"ஓஹோ... மிஸ்டர் குமரேசன் அப்ப நிறை
பேர் கிட்ட பணம் வாங்கி அதுக்கு தங்கம் தர்றது
காக குற்றால மலைக்கு அந்த சித்தர்சாமிய பாக்

போயிருக்கார். ஆனா போன இடத்துல அவரை பார்க்க முடியாம புலி அடிச்சிடிச்சா?"

"அப்படின்னு அவன் பொண்டாட்டிதான் சொல்றா. ஆனா எல்லாம் பொய் -அவனும் எங்கையோ தான் இருக்கான். கொஞ்ச நாள் போகவும் பணத்தை அமுக்கிகிட்டு வடநாட்டு பக்கம் போயி செட்டில் ஆயிட திட்டம் போட்டுருக்கறதாவும் ஒரு பேச்சு இருக்கு."

"இதுல எது உண்மை?"

"கடவுளுக்கு தான் தெரியும். எங்க வரைல அவன் செத்துட்டதா நாங்க அவன் சர்வீஸ் ரெஜிஸ்தரை குளோஸ் பண்ணி பி.எஃப், கிராஜி வட்டில இருந்து எல்லாத்தையும் சட்டப்படி அவன் பொண்டாட்டிக்கு செட்டில் பண்ணிட்டோம்."

"அவங்க போன் நம்பராவது கிடைக்குமா?"

"ஆளே தலைமறைவுங்கறேன் - போன் நம்பர் அது இதுன்னுகிட்டு..."

- மேனேஜர் இழுத்தார்.

"நீங்க இன்னும் உங்க பேருக்கு அர்த்தம் சொல்லவே இல்லை" என்று அந்த நிலையிலும் நகைச்சுவைக்கு முயன்றான் சந்தானம்.

"வாரணம்னா யானைங்க.... வாரணம் உடை யான்னா யானைங்கள வெச்சிருக்கற வன்னு அர்த்தம். போதுமா?"

- அவர் சற்று எரிச்சலோடு கேட்கவும் அதற்கு மேல் அவரை போட்டு நோண்டாமல் இருவரும் வெளியில் வந்தனர்.

"ஆமாம் நீ எப்படா அம்பதாயிரம் கொடுத்தே?" - என்று வெளியே வந்த வேகத்தில் கேட்டான் சந்தானம்.

"சும்மா சொன்னேன்டா... அப்படி சொல்லப் போய் தான் பல விஷயம் தெரிய வந்துச்சு."

"என்ன பெருசா தெரிஞ்சிச்சு... ஆளு அவுட் டுன்னுல்ல சொல்லிட்டாரு!"

"அவரே சந்தேகப்பட்டுருக்காரே.... கேக்கல."

"இப்ப எதை எடுத்துக்கறது - நம்ம அடுத்த திட்டம் என்ன?"

"அவன் மனைவியை எப்படியாவது சந்திக்க றோம்."

"அவள பாத்து..."

"அந்தம்மாகிட்டதான் நமக்கு தேவையான விடை இருக்கு."

"என்னடா விடை - வடைன்னுகிட்டு... மேல போனா உசுருக்கு ஆபத்துன்னு தெரிஞ்சி போச்சு அவனும் தங்கமெல்லாம் சாமியார் கிட்ட வாங்கல. ஆனா அவர்கிட்ட தங்கம் வாங்கலாம் இல்ல எப்படி யாவது தங்கம் செய்ய கத்துக் கிடலாம்கற நம்பிக் கைல இந்த குமரேசன் அவனைச் சுத்தி இருக்கற வங்கள நல்லாவே ஏமாத்தியிருக்கான்னு மட்டும் நல்லா தெரியுது."

"கரெக்ட்... மொத்தத்துல மலைல பைரவ சித்தர் இருக்காருங்கறதும் அவரை பாக்க பேராசை யோட போனா அழிவுன்னும் தெரியுது...."

"பேராசையோட பாக்க போன தானே அழிவு?"

"அப்படின்னா?"

"நாம நியாயமான ஆசையோட போவோம்."

"எப்படி?"

"எனக்கு கழுத்த நெறிக்கற கடன் சுமை அது நீங்குனா போதும் எனக்கு."

"அப்ப எனக்கு?"

"நீ நிஜமா எனக்கு உதவி செய்யற எண்ணத் தோட வா."

"இது நல்ல கதையா இருக்கே....."

"சந்தானம்... இது 2012- ஆம் வருஷம். சித்தர் சாமிங்க விஷயம்கறது ஒரு கற்பனையான நம்ப முடியாத விஷயமாதான் இப்ப நினைக்கப்படுது. குறைந்தபட்சம் அது பொய்யின்னு நாம நிரூபிப் போம். அந்த சித்தர் சாமிகிட்ட நாம தங்கம் கூட கேட்க வேண்டாம். நம்ப வாழ்க்கைல தரித்திரம் இல்லாம இருக்க என்ன வழின்னு கேட்போமே?"

"அதுக்காக உசுரை பணயம் வெச்சு போகச் சொல்றியா?"

"பெரிய விஷயம்னா அதுக்கு தகுந்த ரிஸ்க் எடுத்து தான் தீரணும்!"

"அது சரி..... அந்த சித்த வைத்தியர் எப்படி பைத்தியமானாருன்னு தெரியலியே...."

"வா.... போய் பார்ப்போம். நமக்கு அவர் கிட்டயும் ஏதாவது க்ளு கிடைக்கலாம்..."

- இருவரும் பேசியபடியே காரில் ஏறிக் கொள்ள
கார் மாரியம்மன் கோவில் நோக்கி ஓடி அங்கே
தேங்கி நின்றது.

முகப்பில் ஒரு சிறு கல் மண்டபம்.

அதில் சித்த வைத்தியரை உட்கார்த்தி வைத்
திருந்தனர். அவரும் உடம்பெல்லாம் சங்கிலியோடு
எங்கோ வெறித்து பார்த்தபடி இருந்தார். சந்தானமும்
மும் கணேசனும் அவர் கவனத்தை கலைக்க முயல்
றனர்.

'வைத்தியரே - வைத்தியரே' என்று கூப்பிட்ட
தற்கு அவரிடம் பதிலில்லை. இருவரும் அவரை
கூப்பிடுவதை கோவில் பூசாரி பார்த்துவிட்டு வந்து
பேசினார்.

"இந்த பைத்தியத்துக்கு நீங்க உறவா?"

அவர் கேட்ட நொடி கணேசன் மறுக்காமல்
ஆமோதித்தான்.

"ஆமாங்க..."

"என்ன உறவு?"

"எனக்கு வைத்தியர் மாமா முறை..."

"மாமா முறைங்கறே - இவ்வளவு நாள் எங்க
போயிட்டீங்க?"

"அது... அது.. நான் துபாய்ல வேலைல இருக்
கேன். இப்பதான் இந்தியா வந்தேன். வந்த இடத்துல
மாமாவுக்கு இப்படின்னு தெரிஞ்சு பாக்க வந்தேன்"
- என்று வெகு அழகாக பூசாரியை சமாளித்தான்

கணேசன். சந்தானத்துக்கே அது அதிர்வாகவும்
ஆச்சரியமாகவும் இருந்தது.

இப்படிப்பட்ட நெருக்கடியான தருணங்களை
சமாளிக்க ஒரு தனி அறிவு வேண்டும். அப்படி
சமாளிக்க முடிந்தவர்களே தலைவர்களாக தலை
எடுக்க வல்லவர்கள். மற்றவர்களுக்கு உடம்பு என்று
ஒன்று இருப்பதால் தலை இருக்கிறது அவ்வளவு
தான்!

பூசாரியும் அவன் பதிலால் சற்று சமாதான
மானது போல் அவனைப் பார்த்தார். பின் அலுப்
போடு பேச்சை தொடர்ந்தார்.

"உன்னை மாதிரி உறவுக்காரங்க வர்றீங்க.
பாக்கறீங்க போயிட்றீங்க.... ஆனா இங்க இந்த
வைத்தியரை நாங்க தான் பாத்துக்க வேண்டியிருக்கு.
சமயத்துல உக்காந்துருக்கற இடத்துல மல ஜலம்
கழிச்சிட்றாரு. எங்க நிலையை கொஞ்சம் யோசிச்சுப்
பாரு...."

"இவரை எதாவது பைத்தியகார ஆஸ்பத்திரில
சேர்த்துடலாமே?"

"ஏர்வாடி தர்காவுக்கே கொண்டு போய் கூட
தான் சேர்க்கலாம். ஆனா அதை யார் செய்யறது?"

"நீங்க செய்யக் கூடாதா?"

"எனக்கு என்ன தலையெழுத்து... பொண்
டாட்டியே எனக்கென்னன்னு இருக்கா...."

"அவங்க இப்ப எங்க இருக்காங்க?"

"ஏப்பா... உன் மாமான்னு சொல்லிட்டு இப்ப
எங்க இருக்காங்கன்னு கேட்டா என்னப்பா அர்த்தம்?"

"நான் தான் துபாய் போயிட்டேன்னு சொன்னேன்ல...?"

"துபாய் போயிட்டா உன் மாமன் குடும்பத்தோட கொஞ்சம் கூடவா தொடர்பு இல்லாம போயிருச்சு....."

"அப்படிதான் வெச்சுக்குங்களேன்..."

"என்னவோ போ... அதோ உன் அத்தையே வருது பார்... அதுகிட்டயே கேளு...:" - என்று பூசாரி அவர்களை நோக்கி வரும் ஒரு பெண்மணியை காட்டிவிட்டு விலகிக் கொள்ளவும் கணேசனுக்கு அடுத்த கட்ட நெருக்கடி ஏற்பட்டுவிட்டது புரிந்தது.

கையில் வயர் கூடையுடன் வந்த பெண்ணுக்கு 50 வயது இருக்கும். கூடையில் ஒரு மண்கலயம் வெள்ளைத் துணியால் வாய் மூடப்பட்டு இருந்தது.

வந்தவள் சந்தானம் கணேசன் இருவரையும் பார்த்தாள். கணேசன் மெல்லிய குரலில்

"நீங்க தான் வைத்தியர் சம்சாரமா?" என்று கேட்டான்.

"ஆமாம்.... என்ன விஷயம்?"

"இல்ல.... இவருக்கு எப்படி இப்படி ஆனது?"

"அதை நீங்க எதுக்கு கேக்கறீங்க?"

'அது... அது... நாங்க பத்திரிகைகாரங்க. இவரை பற்றி பல மாதிரி கேள்விப்பட்டோம்.... அதான்."

"பத்திரிகைகாரங்களா?" - அவள் இழுத்தாள்.

பின் "கொஞ்சம் இருங்க" என்றபடி வைத்தியர் அருகே சென்று கஞ்சி கலயத்தை எடுத்து அவரைக் குடிக்கச் செய்தாள்.

தாடி மீசை எல்லாம் கஞ்சி ஒழுக அவரும் ஏதோ குடித்தார். பின் சேலை முந்தானையால் துடைத்துவிட்டவள் அவர்கள் அருகில் வந்தாள். மிக கூர்மையாக பார்த்தாள்.

"ஏம்மா இப்படி பாக்கறீங்க?"

"நெசமா நீங்க பத்திரிகைக்காரங்க தானா?"

"அதுல ... அதுல உங்களுக்கென்னம்மா சந்தேகம்?"

"இல்ல... அந்த குமரேசன் பலர்கிட்ட பணத்தை வாங்கிட்டு செத்துப் போயிட்டான். ஆனா அவன் கிட்ட ஏமாந்தவங்க இங்க இவர்கிட்ட வந்து இவர் நிஜமா பைத்தியமா? இல்லை நடிக்கறாரான்னு பரிசோதனை பண்ணிப் பாப்பாங்க... அதான் நீங்களும் அந்த மாதிரி ஆளுங்களான்னு கேட்டேன்" என்றாள்.

அவளது அந்த பதிலுக்குள் கணேசனும் சந்தானமும் தெரிந்து கொள்ள அனேக விஷயங்கள் இருப்பது மட்டும் புரிந்தது.

"பக்கத்துலதான் வீடு... வீட்டுல உக்காந்து பேசுவோம். இங்க வேண்டாம். நாம இங்க பேசறத பணத்தை இழந்தவங்க பார்த்தா உங்க மேலயும் சந்தேகப்படத் தொடங்கிடு வாங்க. நான் முன்ன போறேன். நீங்க பின் தொடர்ந்து வாங்க." என்று அவள் முன்னால் நடந்தாள். வைத்தியரோ வானத்தை

பார்த்த படியே உட்கார்ந்திருந்தார். அவர் பைத்தி
யமா இல்லை கோமாவில் இருப்பவரா என்று கூட
சந்தேகமா இருந்தது.

"கணேசா... என்னடா விஷயம் எங்கெங்கியோ
போகுது.... குமரேசன் பொண்டாட்டிய பாத்தா கூட
எதாவது சில விஷயம் தெரிய வரலாம். இந்தம்மாவ
பார்த்து என்னடா புண்ணியம்?"

"பேசாம வா.... தங்கம்கற விஷயத்தை மையமா
வெச்சு பல விஷயங்கள் நடந்துருக்கு. அதை முதல்ல
தெரிஞ்சிக்குவோம்."

"அதனால என்ன பிரயோஜனம்?"

"அதை அந்தம்மாகிட்ட பேசின பிறகு
சொல்றேன். பேசாம வா." - என்று வேகமாக காரில்
ஏறிக் கொண்டு வெகு தூரம் வரை சென்றுவிட்ட
அந்த பெண்மணியை தொடரத் தொடங்கினான்
கணேசன்!

8

'சித்த ரகசியங்களும்
ஜீவ ரகசியங்களும் - ஆசைப்
பித்தர்கள் அறிய முடியாதவை!'

– சித்தன் வாக்கு

வைத்தியரின் வீடு ஒரு ஓட்டு வீடு!

வீட்டின் மேல் சுரைக்கொடி பரவியிருந்தது.

நிறைய காய்களும் காய்த்திருந்தன. ஒரு
இடத்தில் 'அகத்தியர் சித்த வைத்தியசாலை' என்கிற

பெயிண்ட்டெல்லாம் உதிர்ந்த பெயர் பலகை. அதன்
மேல் கூட சுரைக்கொடி இலைகள் மூடியிருந்தன.

வாசற்புரம் முருங்கை மரம். கீழே பெரிய
பஞ்சாரக் கூடை - அதனுள் கோழிக் கூட்டம்.

சற்றுத் தள்ளி அகத்தி மரம் ஒன்றும் வளர்ந்
திருக்க அதில் ஆடு கட்டப்பட்டிருந்தது.

காரை ஒரு ஓரமாக நிறுத்திவிட்டு கணேசனும்
சந்தானமும் வந்தனர். வீட்டுகுள் அழைத்தாள் அந்தப்
பெண்.

"உள்ளே ஒரு நீளமான மரபெஞ்ச்!

நோயாளிகள் வந்தால் அதில் தான் அமர்
வார்கள். அதைக் காட்டி அதில் அமரச் சொன்னாள்.

எதிரில் சுவற்றில் பிறைகள். அதில் கண்ணாடி
ஜாடிகளும் பொடிகளும் இருந்தன.

ஒரு சித்த வைத்தியசாலைக்குரிய அமைப்பு
நிறையவே சிதைந்து போயிருந்தது.

கணேசனும் சந்தானமும் உட்கார்ந்து சூழலை
ஊடுருவவும் அந்த பெண்மணியும் செருமினாள்.

"ஆமா நீங்க எந்த பத்திரிகை?"

"எந்த பத்திரிகையா.. அது... அது நாங்க
சென்னைல இருந்து வந்துருக்கோம்."

"அதான் எந்த பத்திரிக்கைன்னு கேட்டேன்."

"இது புதுசா வரப் போகுது. மருத்துவன்
குரல்னு பேர்...."

"சரி இப்ப உங்களுக்கு என்ன தெரியணும்?"

"உங்க கணவரே ஒரு சித்த வைத்தியர். அ
சித்தமே கலங்கி இப்படி நடை பிணமா இருக்கா
எதனால?"

"ஆசைதான்.... அதுவும் சாதாரண ஆசை இ
பேராசை..."

"கொஞ்சம் விளக்கமா சொல்ல முடியுமா?"

"என்னத்த சொல்றது - எல்லாம் அந்த குமர
னால வந்த வினை...."

"அவர் யாரு?"

"இந்த ஊர்க்காரர்தான்... என் வீட்டுக்கா
கிட்ட வைத்தியம் பாத்துக்க வருவாரு...."

"அவர் இப்ப எங்க இருக்காரு?"

"எங்க இருக்காராவா? அவன் பரலோ
போய்தான் பல வருசம் ஆச்சுன்னு பேசிக்கிறா
களே, உங்களுக்குத் தெரியாதா?"

"அது எப்படின்னு சொல்ல முடியுமா?"

"நான் சொல்றத எல்லாம் அப்படியே எழு
வீங்களா?"

"நிச்சயமா....."

"ஒரு வார்த்தையை கூட மாத்தி எழு
கூடாது."

"இல்ல.... அப்படியே எழுதுவோம் நீ
தைரியமா சொல்லுங்க."

"ஏன் சொல்றேன்னா என் புருஷன் பைத்தியமா நடிக்கறதா சிலர் நினைக்கறாங்க. இங்க நான் பட்ற கஷ்டம் எனக்கு தான் தெரியும். உங்க பத்திரிகைல எழுதி அதை எல்லாரும் பார்த்ததுக்கு பிற காவது அப்படி நினைக்கறவங்க திருந்தினா போதும் எனக்கு."

- மூக்கைச் சிந்தி அழுதபடியே பேசிய அந்த பெண்மணி "மோர் சாப்பிடுவீங்க தானே?" என்று கேட்டாள்.

"இல்லை அதெல்லாம் எதுவும் வேண்டாம்...."

"பரவால்ல.... என் வீட்ல என்னால மோர்தான் கொடுக்க முடியும். அவர் நல்லா இருந்திருந்தா இன்னேரம் உங்க நாடிய புடிச்சிப் பார்த்து உங்க உடம்பு வாத உடம்பா, பித்த உடம்பா, நீர் உடம்பான்னு கண்டு பிடிச்சு அதுக்கு தகுந்த மாதிரி இஞ்ஜி ஜுஸ் இல்லேன்னா நெல்லிக்கா ஜுஸ்னு கொடுப்பாரு. உபசாரம் பண்ண மாதிரியும் இருக்கும். மருந்து கொடுத்த மாதிரியும் இருக்கும்" என்றபடி எழுந்து போனாள்.

சந்தானம் அடுத்த நொடி கணேசனை முறைப் போடு பார்த்தான்.

"நீ எதுக்குடா இப்ப இப்படி லுக் விட்றே?"

"பத்திரிகைகாரன்னு நம்பி பேசப் போறாங்க.... ஆனா நீ ஒரு கடன்காரன். இவங்கள இப்படி எல்லாமா ஏமாத்தறது?"

"வேற வழியில்ல சந்தானம். இந்த விஷயம் ஒரு வேகத்துல நம்மை இழுத்துக் கிட்டு போகுது. நாம

சில முடிவுகள் எடுக்கற வரை போய் தான் தீரணும் வேற வழியில்லை."

- கணேசன் சமாளிக்க அந்த பெண்மணி மோ டம்ளரோடு வந்தாள். இருவரும் குடித்தனர் சுமாராக இருந்தது.

"சரி இப்ப நீங்க என்ன கேக்கணுமோ கேளுங்க..."

"நீங்க அந்த குமரேசன் செத்துட்டான்னு சொன்னீங்க. அது எப்படி எதனாலன்னு சொல் லுங்க..."

"ஆமா நீங்க எதையும் எழுதிக்கலியா..... சும்மா சொல்லுங்கன்னு சொல்றீங்க...."

"அது... அது... இதோ இந்த செல்போன் ரிக்கார்டர் இருக்கு. அதுல நீங்க பேசறது பதிவா யிடும்."

- அந்த பெண்ணிடம் மாட்டும் போதெல்லாம் வெகு அழகாய் சமாளிக்கும் கணேசனை திரும்பவும் ஒரு முறை ஆச்சரியம் குறையாமல் பார்த்தான் சந்தானம்.

அந்தப் பெண்ணும் சொல்லத் தொடங்கினாள்

"என் வீட்டுக்காரர் பேர் சிங்கமுத்துங்க. பரம் பரை சித்த வைத்திய குடும்பம். சித்த வைத்தியம் னாலே மூலிகை தேடி காட்டுக்கு போறது தானேங்க வழக்கம்?

எங்க வீட்டுக்காரரும் அப்படி குற்றால மலைக் காட்டுக்கு பௌர்ணமி சமயத்துலயும். அமாவாசை சமயத்துலயும் போய் மூலிகை பறிச்சிட்டு வருவாரு.

"அது ஏன் பௌர்ணமி அமாவாசைன்னு போகணும். சாதாரண நாட்கள்ள போகக் கூடாதா?" - என்று சந்தானம் இடை கேள்வி கேட்டான்.

"அந்த நாட்கள்ளதான் மூலிகைகள் தலை காட்டும். அதனால அப்பதான் என் வீட்டுக்காரர் போவார்..."

"சரி நீங்க தொடர்ந்து சொல்லுங்க...."

"அம்மா எங்களுக்கு உங்க சித்த வைத்தியம் பத்தின தகவல் வேண்டாம். குமரேசன் எப்படி இறந்தாரு. உங்க வீட்டுக்காரருக்கு ஏன் பைத்தியம் பிடிச்சது இதை மட்டும் சொல்லுங்க...."

"அதைச் சொல்லணும்னா எல்லாம் தானே சொல்லணும். அப்பதானே உங்களுக்கு புரியும்."

"சந்தானம் நீ சும்மா இரு. சரிம்மா நீங்க சொல்லுங்க."

"நடுவுல கேள்வி கேட்காம என்ன பேச விட்டா தான் என்னால எல்லாத்தையும் சொல்ல முடியும். இடைல இடைல நீங்க என் பேச்சை வெட்டிப் பேசினா என்னால தெளிவா பேச முடியாது."

"இல்ல... நாங்க இனி குறுக்கிட மாட்டோம். நீங்க பேசுங்க...."

"நல்லது... இப்படி அமாவாசை பௌர்ணமிக்கு குற்றால மலை பக்கம் போறதால அந்த மலைக் காடே என் வீட்டுக் காரருக்கு அத்துப்படி. காட்டிலாகாகாரங்களே என் வீட்டுக்காரர்கிட்ட தான் வழி கேட்பாங்கன்னா பாத்துக்குங்களேன்."

"அப்புறம்."

"அப்புறம்மென்ன... அந்த மலைல நிறைய சித்தர் சாமிங்க இருக்காங்க. எங்களுக்கு அகத்தியர் தான் குல தெய்வம்."

"ஓஹோ....?"

"அகத்தியருக்கு மலைக்கு மேல கோவில் இருக்குது..."

"அப்புறம்?"

"இதனால அந்த குற்றால மலை காட்டு சித்தர்களும் என் வீட்டுக்காரருக்கு நல்ல பழக்கம். அதுல ஒருத்தர் பைரவ சித்தர்னு...."

- அந்த பெண்மணி அவர்கள் எதிர்பார்த்த விஷயத்திடம் வரவும் இருவரும் நிமிர்ந்த அமர்ந்தனர்.

"இந்த சித்தர்சாமியை அவ்வளவு லேசுல யாரும் பாத்துட முடியாது. இவரை பாக்கணும்னா இவர் பேரைச் சொல்லி மந்திரம்லாம் சொல்லணும்..."

"அப்ப பைரவ சித்தர் ஒரு சாமி மாதிரின்னு சொல்லுங்க."

"சாமியே தான்... பைரவசாமிதான் சித்தரா நடமாட்றதாகூட சொல்வாங்க. செவ்வாக் கிழமை அன்னிக்கு வர்ற அஷ்டமி அன்னிக்கு இவரை மலைல யார் பார்த்தாலும் அவங்க கேட்டது கிடைக்கும். என் வீட்டுக்காரரும் அப்படி ஒரு அஷ்டமி செவ்வாக் கிழமை அன்னிக்கு சாமிய பார்த்து நான் எப்பேர்ப்

பட்ட வியாதியஸ்தன குணப்படுத்த விரும்பினாலும் குணப்படுத்திடணும் சாமின்னு வரம் கேட்டாரு. சித்தர்சாமியும் என் புருஷன் தலைல கை வெச்சு நீ கேட்டத தந்துட்டேன்னார்.... என் வீட்டுக்காரருக்கு ஒரே சந்தோஷம். பைரவ சித்தர்கிட்ட ஒரு முக்கிய மாக விசயம் என்னன்னா ஒருத்தர்க்கு ஒரு தடவை மட்டும்தான் அவங்க கேக்கறத தருவாரு....

என் வீட்டுக்காரரும் சாமி வரம் தரவும் எய்ட்ஸ் வந்தவங்கள எல்லாமும் குணப்படுத்தினாரு. அவ் வளவு ஏன்... கேன்சர் வியாதி வந்தங்கள கூட குணப்படுத்திட்டாரு. இதனால என் வீட்டுக் காரருக்கு பெரிய பேர் வர ஆரம்பிச்சிச்சு. இதை கேள்விப்பட்டுதான் குமரேசன் தம்பியும் வந்தாரு.

குமரேசன் மாமா ஒருத்தருக்கு புத்து நோய் முத்திடிச்சி. மூணு மாசம் தான் உயிரோட இருப் பார்னு அடையாறு ஆஸ்பத்திரியலயே சொல்லிட் டாங்களாம். ஆனா என் வீட்டுக் காரர் சில மூலிகை களை கொடுத்து குணப்படுத்திட்டாரு. இதனால குமரேசன் தம்பியும் என் வீட்டுக்காரரை கடவுளாவே நினைச்சு தினம் தினம் வந்து பாத்துட்டு போவாரு.

அப்ப தான் என் வீட்டுக்காரர் புத்தி கோணலா ஒரு நாள் வேலை செய்யத் தொடங்கிச்சு. குமரேசன் தம்பிகிட்ட பைரவ சித்தர் பத்தி சொல்லி ஒரு செவ்வாக்கிழமை அஷ்டமி அன்னிக்கு மலைக்கு கூட்டிகிட்டு போய் தரிசனம் கிடைக்க வெச்சு சாமிகிட்ட தங்கம் வேணும்னு கேள். அப்படி நீ கேட்டு கிடைக்கற தங்கத்துல எனக்கு சரி பாதி கொடுத்துடணும்னு சொன்னாரு.

குமரேசன் தம்பியும் அப்படியே கேட்டாரு சாமியும் தங்கம் கொடுத்துட்டாரு...."

"தங்கம் கொடுத்தாருன்னா எப்படி - எவ்வளவு?"

"ஒரு இருபது முப்பது பவுன் இருக்கும்."

"இவ்வளவுதானா?"

"அதுக்கென்ன பண்றது... நாம எதை கேட்டோமோ அதுக்கு சரியான காரணம் இருக்கணும். குமரேசனுக்கு ஒரு அக்கா இருந்துச்சி. அதுக்கு கல்யாணம் பண்ண தங்கம் தேவைன்னு சொல்லவும் முப்பது பவுனை கொடுத்துட்டாரு.

என் வீட்டுக்காரருக்கு ரொம்ப வருத்தம். சாமிகிட்ட நீ ஒரு மூட்டை வேணும்னு கேட்டுருக்கலாம். அவர் எவ்வளவுன்னு கேட்டாலும் சரி எதுக்குன்னு கேட்டாலும் சரி ஒரு கோவிலுக்கு தங்க விமானம் கட்டன்னா முடிஞ்சி போச்சுன்னு எடுத்துக் கொடுத்தாரு.

ஆனா அந்த தம்பிக்கும் ஒரு தடவை தானே தருவாரு. இப்ப என்ன பண்றதுன்னு யோசிச்சாங்க. அப்பதான் குமரேசன் சும்மா இல்லாம தன் மச்சினனை கூட்டிகிட்டு போய் அவன் மூலமா ஒரு மூட்டை தங்கத்தை எப்படியாவது வாங்கிடணும்னு திட்டம் போட்டான். இதைஎன் வீட்டுக்காரர் கிட்டேயும் சொல்லலை. அவனா ரகசியமா முடிவு பண்ணி அக்கம் பக்கத்துல எல்லாம் கடைல விக்கறதை விட ஒரு பவுன் தங்கத்தை 5000 ரூபாய் குறைவா தரேன்னு சொல்லவும் பல பேர் அவன் கிட்ட பணம் கொடுத்தாங்க. நாணயமான பேங்குல வேலை

இருந்ததால ரொம்ப சௌகர்யமா போச்சு. தங்கத்தை அடகு வைக்க வர்றவங்க கிட்டல்லாம் விலை பேச ஆரம்பிச்சிட்டான். கிட்டத்தட்ட அம்பது அறுவது லட்ச ரூவா சேர்ந்துடுச்சு. அப்ப பார்த்தது செவ்வாக்கிழமை வர்ற அஷ்டமியும் ரொம்ப தள்ளி கிட்ட தட்ட ஏழெட்டு மாசம் கழிச்சு வந்துச்சு. பணம் கொடுத்தவங்கல்லாம் அதுக்காக பொறுமையா இருந்தாங்க.

இவனும் மச்சினனை கூட்டிகிட்டு புறப்பட்டான். அந்த சாமியை பாக்கணும்னா ஒரு மந்திரம் சொல்லணும்னு சொல்லியிருந்தேன்ல அதை எழுதி வெச்சிருந்த அவன் டைரிய குற்றால மலைல இருக்கற குரங்கு ஒண்ணு எப்படியோ தூக்கிட்டு போயிடிச்சு.

பிறகு தான் மந்திரத்துக்காக என் வீட்டுக்காரரை பார்க்க வந்தாங்க. என் வீட்டுக்காரரோ நீ எனக்கு தெரியாம இவ்வளவு தூரம் போயிட்டியான்னு கோவிச்சுகிட்டாரு. பொறவு அவரை என்னத்த சொல்லி சமாதானம் செய்தான்னு தெரியாது. அவரும் அவன் கூட மலைக்கு கிளம்பிட்டாரு. அப்ப போனவர் தான்... இப்படி பைத்தியமா திரும்பி வந்தாரு. அங்க என்ன நடந்துச்சோ?

அவன் மச்சினனோ பாதி வழில ஓடியே போயிட்டான். அவன் மூலமாதான் குமரேசனை காட்டுல புலி அடிச்ச விஷயம் எல்லாருக்கும் தெரிய வந்தது. இதுல ஒரு கூத்து என்னன்னா குமரேசன் உடம்பே கிடைக்கல. மச்சினனும் சொல்லாம கொள்ளாம ஓடி போயிட்டான். அதனால எல்லாருக்கும் என்ன சந்தேகம்னா சித்தர்சாமி தங்கம்

தந்துருக்காரு. அதை எடுத்துக்கிட்டு குமரேசன் வட
நாட்டுப் பக்கம் போயிட்டான். இங்க ஊருக்கு வந்த
பணம் கொடுத்தவங்களுக்கெல்லாம் தங்கம் த
வேண்டியிருக்கும்கறதால வரலைன்னு ஒரு சாரா
சொல்றாங்க.

இதுல என் வீட்டுக்காரரும் உடந்தை.

குமரேசனும் என் வீட்டுக்காரரும் கூட்டாளிங்க
அதனால ஊரை ஏமாத்த பைத்தியம் மாதிரி நடி
கறதா சிலர் புரளியை கிளப்பிவிட தினசரி ஒருத்
ராவது என் புருசன் நிஜமா பைத்தியமான்னு எ
கிட்ட கேட்கறது வழக்கமா போச்சு.

இதான் நடந்த விஷயம்....”

வைத்தியர் மனைவியின் விளக்கம் கணேசனை
கட்டிப்போட்டுவிட்டது. டைரி அவன் கைக்கு எப்படி
வந்தது என்பது தெரிந்துவிட்டது. குரங்கின் உபயம்
குரங்கு தூக்கிச் சென்று போட்ட டைரி பழைய
பேப்பர் கடைக்கும் எப்படியோ போயிருக்கிறது.

அதேசமயம் அதை எழுதின வருஷத்திற்கு பல
வருடங்கள் கழித்து தான் என்னென்னவோ நடந்
துள்ளது என்பதும் புரிந்தது.

அதை எல்லாம் கூட்டிக்கழித்து யோசித்த படி
இருந்தான் கணேசன். ஆனால் சந்தானத்திடம்
இன்னமும் சந்தேகங்கள்.

“குமரேசன் மலைக்கு போனான். போன இடத்
துல ஏதோ தப்பு நடந்து புலி அடிச்சி புடிச்சிங்கற
வரை சரி. அவர் கலெக்ட் பண்ண அந்த 50,60 லட்ச
ரூபா எங்க போச்சு? என்று கேட்டான்.

“அதை தான் குமரேசன் எடுத்துக்கிட்டு
போய்ட்டதா பணம் கொடுத்தவங்க பேசிக்கறாங்க....”

“உண்மைல குமரேசன் இறந்துருந்தா?”

“பணம் அவன் பொண்டாட்டிகிட்ட தான்
இருந்திருக்கும். ஆனா அவளோ பாவம் கூலி
வேலைக்கு போயில்ல வவுத்தை கழுவிக்கறா!”

“அப்ப குமரேசன் தங்கத்தோட பணத்தோட
மச்சினனை கூட்டிக்கிட்டு வடநாட்டு பக்கம் போயிட்
டான்னு சொல்றது தான் உண்மையா?”

“அப்படி நம்பவும் இடமிருக்குல்ல....?”

“அப்படின்னா அவர் மனைவி இங்க எதுக்கு
கூலி வேலை பார்த்து கஷ்டப்படணும்.”

“அவ வரைல புருஷன் இறந்துட்டான். அதான்
உண்மை. பணம் எங்க இருக்குன்னு தனக்கும் தெரி
யாது. புருஷனும் இல்லை. பணமும் இல்லாததால
தான் நான் கூலி வேலை பாக்க வேண்டியிருக்குன்னு
சொல்றா அவ.”

“குழப்பமா இருக்கே....?”

“குழப்பமாவா.... அங்க என்ன நடந்ததுன்னு
தெரிஞ்ச ஒரே ஆள் என் வீட்டுக்காரர்தான். அவர்
ஊருக்கு திரும்பி யார் கிட்டேயும் எந்த உண்மையை
யும் சொல்லிடக் கூடாதுன்னு அந்த குமரேசன் தான்
இவர் தலைல பலமா

அடிச்சு இப்படி பண்ணிட்டான்னும் சொல்
றாங்க.”

“உங்க கணவர் தலைல காயம் இருந்ததா?”

"இருந்தது... பெரிய ரத்தக்காயம். பன்னெண்டு
தையல்ல போட்டோம்!"

"அப்ப முடிவா உங்க அபிப்ராயம்?"

"குமரேசன் தங்கம் அப்புறம் பணத்தோ
ஓடிட்டான். இவரையும் பைத்தியமாக்கிட்டா
அவன் பொண்டாட்டி ஊரை ஏமாத்திக்கிட்டிருக்
கொஞ்ச நாள் கழிச்சு அவளும் ஊரை விட்
ஓடிப்போயிடுவா. இதுதான் என் கருத்து."

"சரி.... உங்க கணவரை நீங்க குணப்படுத்
முயற்சியே செய்யலையா?"

"என்னால முடிஞ்ச முயற்சிகளை செய்தே
ஆனா தலைல அடி பலமா பட்டிருக்கறதால கு
மாக நாளாகும்னு சொன்னாங்க. ஆஸ்பத்திரியி
வெச்சு பாத்துக்க எனக்கு வசதியில்ல. குணசீல
ஏர்வாடி தர்காவுல விடவும் மனசு இல்லை. நா
மனசார நம்பறது இந்த மாரியம்மனை தான்
ஆகையால அவ மண்டபத்துல விட்டுட்டே
அப்பப்ப போய் போய் பாத்துக்கறேன். பூசாரி
இருந்து கோவிலுக்கு வர்றவங்களும் உதவியு
செய்யறாங்க. இப்படியே இருந்தா எப்படின்
கோபமும் படறாங்க.

பத்திரிகைக்காரங்க உங்ககிட்ட நான் சொல்
இந்த நேரம் இது பத்திரிகைல வந்து என் கஷ்ட
எல்லாருக்கும் தெரிஞ்சா சரி."

- வைத்தியர் மனைவி சொல்லி முடித்து கண்
ணிரண்டையும் கசக்கிக் கொண்டாள்.

கணேசனும் சந்தானமும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். புலி அடித்து இறந்து விட்டதாக கேள்விப்பட்ட விஷயம் பொய் என்பதில் இருந்து குமரேசனுக்கு நிறைய தங்கம் கிடைத்திருக் கிறது என்கிற தகவல் கணேசன் மனதில் பால் பார்த்தது போல் இருந்தது!

9

'ஆசைக்கு மனம் மயங்கலாம்
அறிவு மயங்கக் கூடாது!'

- சித்தன் வாக்கு.

கார் மதுரையை நோக்கி சென்று கொண் டிருந்தது. நகத்தைக் கடித்து துப்பிக் கொண்டிருந்தான் கணேசன். காரை ஓட்டிய படி வந்த சந்தானம் திரும்பிப் பார்த்துக் கேட்டான்.

"என்ன பண்ணப் போறே?"

"மலைக்கு போகப் போறேன்."

"அப்ப மலைல பைரவ சித்தர் இருக்கறதும் அவர் தங்கம் தர்றாருங்கறதும் உண்மை - அதுல சந்தேகம் இல்லை அப்படிதானே?"

"ஆமாம்...."

"நான் இப்ப உன்னை சில கேள்விகள் கேட்டா தப்பா எடுத்துக்க மாட்டியே?"

"தாராளமா கேளு...."

"இன்னிக்கு உலகத்துலயே ரொம்ப பெரிய விஷயம் தங்கம்தான். கடத்தல்லயும் தங்கத்துக்குதான் அதிக மதிப்பு..."

"அதுக்கென்ன இப்போ?"

"இப்படிப்பட்ட தங்கத்தை ஒரு சாமியார் சும்மா தர்றார்னா அதை உன்னால நம்ப முடியுதா?"

"சந்தேகம் வந்து அதை தீர்த்துக்கத் தானே அருப்புக்கோட்டைக்கு வந்து இவ்வளவு தூரம் விசாரணையும் செய்துருக்கோம்...."

"இந்த விசாரணைல அப்படி ஒண்ணும் தெளிவான பதில் கிடைச்சதா எனக்கு தெரியல...."

"நீ அப்ப என்னதான் சொல்ல வரே?"

"நாம சந்திக்க வந்தவங்க நல்லா சந்தோஷமா வசதியா இருந்திருந்தா அந்த சாமியார் தங்கம் கொடுத்தது நிஜம்னு நினைக்கலாம். இங்க ஒருத்தன் சித்த பிரமை பிடிச்சு கிடக்கறான் - ஒருத்தன் செத்துட்டான்னு சிலரும், இல்லன்னு சிலரும் சொல்றாங்க. எதை நம்பறது எதை ஏத்துக்கறதுன்னே தெரியலியே..."

"எதுக்கு நாம குழம்பிக்கிட்டு மலைக்கு போயே பார்த்துடுவோமே.....?"

"அப்ப தங்கம் கிடைக்கும்னு நம்பி எல்லாம் நாம் போகப் போறது இல்லை - கிடைக்குதா பாக்கலாம்னுதான் போகப்போறோம் - அப்படி தானே?"

"எப்படி வேணா வெச்சுக்கோ... என் வரைல நான் இழக்கறதுக்கு எதுவும் இல்லை. என்கிட்ட

இருக்கறது இந்த உயிர் மட்டும்தான். இதுக்கு நான் வாழற ஊர்ல ஒரு மதிப்பும் இல்லை. மலைலயாவது இதுக்கு ஏதாவது மதிப்பு ஏற்படுதான்னு பாக்கறேன்."

"நீ வாழ்க்கையை வெறுத்தவன் - இப்படி தான் பேசுவே. ஆனா எனக்கு என்னமோ அந்த மலைக்கு போறதால நம்ப வாழ்க்கைல நல்லது நடக்கும்னு தோண மாட்டேங்குது."

"அப்ப நீ வராதே... நானும் உன்னை கூப்பிடலையே" - கொஞ்சமும் யோசிக்காமல் கணேசன் சொன்ன பதில் சந்தானத்தை சற்று திணற அடித்தது.

"கணேசா.... நீ இப்படி தான் சொல்வே... உனக்கும் நான் ஒரு விஷயம் சொல்லிக்கறேன். இதை எல்லாம் நம்பி நீ மேல போகாதே... கடைசில அந்த குமரேசன் மாதிரி உன்னையும் புலி அடிச்சிடலாம்..."

"அப்ப குமரேசனை புலி அடிச்சு கொன்னுடிச்சின்னு நீ நம்பறியா?"

"நிச்சயமா. நாம குமரேசன் மனைவியை பாக்காம வந்துட்டோம். பாத்துட்டு வந்துருந்தா நிச்சயம் நீயும் என்னைப் போலதான் யோசிப்பே."

- சந்தானம் கணேசனிடம் தன் கருத்தை வலியுறுத்தும்போது காரிடம் சண்டித்தனம். மக்கரடித்து தேங்கி நின்றது.

"என்னாச்சு?"

"ரேடியேட்டர் அடைக்குது....."

- இறங்கி பானட்டை திறந்தான். குபீர் என்று முகத்தில் அறைந்தது நீராவிப் புகை.

"வண்டியை மெய்ன்டைனே பண்ண மாட்டியா?"

"ரொம்ப பேசாதே... இதெல்லாம் எப்ப எப்படி நடக்கும்னு யாருக்கும் தெரியாது." - என்றபடியே நாலாபுறமும் பார்த்தான். சற்று தள்ளி ஒரு குடிசை.

"இரு... அங்க போய் தண்ணி கிடைக்குதான்னு பாக்கறேன்." - என்ற சந்தானமும் அந்த குடிசையை நோக்கி சென்றான். குடிசையின் தட்டிக்கதவு லேசாக மூடியிருந்தது. குரல் கொடுத்தான். உள்ளிருந்த ஒரு பெண் எட்டிப் பார்த்தாள்.

கட்டிட வேலை நடந்த இடத்தில் மேஸ்திரியின் கன்னத்தில் அறைந்த அதே பெண் தான்!

"தப்பா எடுத்துக்காதீங்க... கொஞ்சம் தண்ணி வேணும். கார்ல ரேடியேட்டர்ல தண்ணி இல்ல." என்ற சந்தானத்தை மேலும் கீழும் பார்த்தவள்

"போங்க எடுத்துகிட்டு வரேன்...." - என்றாள்.

அதேபோல குடிசைக்குள் ஒரு மூலையில் வைத்திருந்த பிளாஸ்டிக் குடத்தை எடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டு சாலையில் நின்றிருந்த காரை நோக்கி நடந்தாள். சந்தானம் அவள் அருகில் வரவும் குடத்தை வாங்கி தண்ணீரை ரேடியேட்டரில் விட்டு அதன் கொந்தளிப்பை அடக்கப் பார்த்தான்.

அப்போது அவள் பார்வை காருக்குள் அமர்ந்திருந்த கணேசன் மேல் சென்றது. காரின் டேஷ் போர்டின்மேல் குமரேசன் டைரி கிடந்தது. யதார்த்தமாய் அதை பார்த்தவள் உற்று பார்த்தாள். கணேசனும் அதை கவனித்தான்.

அவள் புருவம் வளைந்து சுருங்கியது.

மெல்ல நெருங்கி வந்து உற்றுப் பார்த்தாள்.

"இந்த டைரி_" - என்று கணேசனிடம் கேட்டாள்.

உடனே அவன் அதை எடுத்து அவள் முன் நீட்டியவனாக

"இதை பார்த்திருக்கீங்களா?" என்று கேட்டான்.

அவளும் வாங்கிப் பிரித்தாள். பிரித்த வேகத்தில் உள்ளே குமரேசன் பக்கம் பக்கமாய் எழுதியிருந் அன்றாடக் குறிப்புகளைப் பார்த்தவளாய் பரவசப் பட்டாள்.

"இது அவர் டைரி.... என் புருஷன் டைரி... உங்ககிட்ட எப்படி?" - என்றும் கேட்டாள்.

"இது ஒரு வடை பஜ்ஜி கடைல கிடைச்சது...."

"வடை பஜ்ஜி கடைலயா?"

"ஆமா.... நாங்க குற்றாலம் போயிருந்தப்போ அங்க ஒரு கடைல இருந்தது. ஒரு டைரியை போய் கிழிச்சு பொட்லம் கட்றாரேன்னு நான்தான் இதை அந்த கடைல இருந்து எடுத்துட்டு வந்தேன். அப் புறமா இதை படிச்சுப் பார்த்தேன். பல விஷயங்களை என்னால நம்ப முடியல. இதெல்லாம் எவ்வளவு உண்மைன்னு தெரிஞ்சுக்க தான் நான் அருப்புக் கோட்டை வந்தேன். உங்களை எல்லாம் பாக்க அலை அலைன்னு அலைஞ்சேன்." - கணேசன் ரத்னச் சுருக்கமாய் விஷயத்துக்கு வந்து சொல்ல வேண்டி யதை சொல்லி முடித்துவிட்டான்.

அதற்குள் சந்தானமும் பானட்டை மூடி
காலி குடத்தோடு வந்து அந்த பெண்தான் குமரே
மனைவி என்று தெரிந்து ஆச்சரியமாகிவிட்டா

அவள் கண்களில் கண்ணீர் பீறிட்ட
இருந்தது.

"அம்மா நான் உங்க கூட நிறைய பேச
உங்க குடிசைக்கு போகலாமா?" என்று கேட்டா
அவளும் டைரியோடு குடிசை நோக்கி நடந்தா
அவர்களும் பின்தொடர்ந்து சென்று உள் நு
தனர். அவள் ஒரு கிழிந்த பாயை எடுத்து போட்டா
அதன் மேல் அமர்ந்தனர். அவள் கதவை ச
சாற்றிவிட்டு வந்து அவர்கள் எதிரில் ஒரு ஓரம்
நின்று கொண்டாள். அழுகை மட்டும் நி
வில்லை.

"அம்மா உங்கள நான் சில கேள்வி
கேட்கலாமா?"

"கேளுங்க....."

"உங்க கணவர் இப்ப உயிரோட இருக்கா
இல்லை வைத்தியர் மனைவி சந்தேகப்பட்ற மாதி
வடநாட்டு பக்கம் தப்பி ஓடிட்டாரா?"

"அவங்க அப்படி எல்லாம் தான் சொல்லியிரு
காங்களா?"

"ஆமாம்..... இதுல எது நிஜம்?"

"என் புருஷன் உயிரோட இருந்தா நான் ஏ
இப்படி இருக்கேன். நான் எதுக்கு இப்படி குடிசை
இருந்துக்கிட்டு கஷ்டப்படணும்."

"நீங்க உங்க புருஷனை நம்பி பணம் கொடுத்த
வங்களை ஏமாத்தறதுக்காக வேஷம் போட்றதா ஒரு
பேச்சு இருக்கே...."

"இது வேஷம் இல்லை. இது நிஜம். பாழாப்
போன தங்க ஆசையால வந்த விபரீதம்...."

"என்னம்மா சொல்றீங்க - புரியும்படி சொல்
லுங்க."

"எல்லாம் அந்த சித்த வைத்தியனால வந்த
வினை. அந்த ஆள் தான் என் புருஷனை பயன்படுத்தி
தங்கம் கேட்கச் சொன்னவன்...."

"அப்ப பைரவ சித்தர் - அவர் தங்கம் தர்றா
ருங்கறது எல்லாம் உண்மையா?"

"ஆமாம்.... என் புருஷன் தங்கத்தோட வரேன்னு
சொல்லிட்டு மலைக்கு போனப்போ நான் நம்பலை.
உங்களுக்கு பட்டாதான் புத்தி வரம்னு சொன்னேன்.
ஆனா அவர் முப்பது பவுன் தங்கத்தோட வந்தப்போ
நான் ஆச்சரியப்பட்டுப் போனேன்."

"முப்பது பவுன் தங்கம்னா... எப்படி - நகை
யாவா? இல்லை தங்க பிஸ்கட்டாவா?"

"ஒரு எலுமிச்சங்கா அளவு உருண்டையா
தங்கம் இருந்தது. எடை போட்டப்போ 240 கிராம்
இருந்தது."

"அப்ப சித்தர் இருக்கறது உண்மை - அவர்
தங்கம் தர்றதும் உண்மை."

"ஆமாம்... ஆனா அது என் புருஷனுக்குள்ள
பேராசையை உருவாக்கிடிச்சு. அவர் தங்கத்தோட

வந்த விஷயம் ஊருக்குள்ள ஒரு மாதிரி பரவிடிச்சு
என் புருஷனும் அதை மறைக்காம ஒத்துக்கிட்டு
யாருக்கெல்லாம் தங்கம் வேணுமோ என்கிட்ட
வாங்கன்னு எல்லார்கிட்டயும் பணம் வாங்க ஆரம்
பிச்சிட்டாரு."

"எந்த நம்பிக்கைல....?"

"என் தம்பியை கூட்டிக்கிட்டு போய் சித்தரை
சந்திக்க வெச்சு கோவில் கோபுரத்துக்கு தங்க
விமானம் வேயறதுக்குன்னு சொல்லி அவர்கிட்ட
கேட்டா அவரும் கிலோ கணக்குல தாராளமா
தருவார்னு நம்பினார்...."

"அப்புறம்?"

"அப்புறம் என்ன.... நான் எவ்வளவோ சொல்லி
யும் கேட்காம கிளம்பிப் போனாங்க. அதுல என்
தம்பி மட்டும் பாதி வழில புலி துரத்தினதா சொல்லி
ஓடி வந்துட்டான். அவர் வரவேயில்லை. அவரை புலி
அடிச்சு கொன்னுடுச்சி."

"அது எப்படி முதல் இரண்டு தடவை போனப்ப
எதுவும் நடக்கலை - மூணாவது தடவை மட்டும்
எப்படி இப்படி ஆச்சு?"

"அங்க போகும்போது சொல்ல வேண்டிய
மந்திரம் ஒண்ணு இருக்கு. அதை கொஞ்சம் தப்பா
சொன்னாலும் போதும் இப்படி எல்லாம் ஆயிடு
மாம்."

"சரி.... உங்க தம்பி தான் ஓடி வதுட்டாரே - நீங்க
ஏன் இப்படி தனியா கஷ்டப்படணும். உங்க தம்பி கூட
இருக்கலாமே?"

"அவன் இங்க இருந்தா தானே? பணம்
கொடுத்தவங்க என் புருஷன் இல்லேங்கவும் அவன்
கிட்ட கேட்டாங்க. சிலர் போலீஸ் கம்ப்ளைண்டும்
கொடுத்தாங்க. இவன் பயந்து போய் ஊரை விட்டே
ஓடிட்டான்."

"உங்களுக்கு அப்பா அம்மான்னு யாரும்
இல்லையா?"

"இல்லை. ஒரு தம்பிதான். அவன் ஓடவும்
எல்லாரும் என் கிட்ட வந்து கொடுத்த பணத்தை
கேட்டாங்க. ஆனா அதை அவர் எங்க வெச்சிருக்
காருன்னே எனக்கு தெரியல. அதை சொன்னா யாரும்
நம்பத் தயாரில்லை."

"அதனால நீங்களும் ஊருக்குள்ள இருக்காம
இப்படி ஊருக்கு வெளியே வந்து இருக்கீங்களா?"

"ஆமாம்... பாழும் வயிறுன்னு ஒண்ணு இருக்கே?
வேற எங்கையாவது வேலைக்கு போகலாம்னாலும்
தனியா போக பயமா இருக்கு. அதனால படிச்சிருந்
தும் கூலி வேலைக்கு போய் வந்துக்கிட்டிருக்கேன்.
அதுமட்டுமில்லை. என் புருஷன் வாங்கின பணத்தை
நான் எப்பாடு பட்டாவது திருப்பிக் கொடுத்துட்டு
தான் சாவேன். அதுக்காகவும் இந்த ஊர்ல இருக்
கேன்."

"சரி.... வைத்தியருக்கு எப்படி அப்படி ஆச்சு?"

"என் தம்பி சொன்னபடி பாத்தா அவர் புலி
துரத்தும்போது ஓடி வந்ததுல் ஒரு பள்ளத்துல
விழுந்து தலைல அடிபட்டிருச்சு. அதனாலதான்
அப்படி ஆயிட்டாரு....."

"அப்ப புலி அவரையும்ல அடிச்சு தின்னுடு
கணும்."

"புலிக்கு என் புருஷன் சிக்கவும் இவங்கள
விட்டுடிச்சு."

"இதை ஏன் வைத்தியர் மனைவி புரிஞ்சுக்கா
உங்க மேல குத்தம் சொல்றாங்க."

"அவங்களுக்கு தெரிஞ்சது அவ்வளவு தா
மொத்தத்துல தங்க ஆசை வைத்தியர் குடும்பம் எ
குடும்பம்னு எல்லாத்தையும் அழிச்சிடிச்சு."

"சரி.... உங்க கணவருக்கு இப்படி ஆன
இருக்கட்டும். மலைல சாமியார் ஒருத்தர் தங்க
தர்றார்னு தெரிஞ்சு ஊருக்குள்ள இருந்து ஒருத்
கூடவா மலைக்கு போகலை...."

"போகாம இருப்பாங்களா? எனக்கு தெரிஞ்
கூட்டம் கூட்டமா போனவங்க கூட இருக்காங்
ஆனா அவங்களால அந்த சாமியாரை பார்க்
முடியல. அதுக்குதான் அந்த மந்திரம் தெரிய
ணுமே...."

"போகட்டும்.... அவரால மட்டும் எப்படி தங்க
தர முடியுது - அவர்கிட்ட ஏது அவ்வளவு தங்கம்?"

"இந்த கேள்விக்கு சித்த வைத்தியரே பதில்
சொல்லிட்டாரு. அவ்வளவும் ரசவாத தங்கமாம்...."

"அப்படின்னா?"

"சித்தர்சாமிங்களுக்கு இரும்பை தங்க மாக்கறது
எல்லாம் சுண்டைக்காய் பெறாத விஷயமாச்சே."

"அப்ப மந்திரம் தெரிஞ்சு அவரை பார்க்கப்
போனா பார்த்துடலாம். அப்படி தானே?"

"ஆமாம். ஆனா அந்த மந்திரம் என் வீட்டுக்
காரருக்கும் வைத்தியருக்கும் மட்டும் தான் தெரியும்.
வைத்தியர் சித்தம் கலங்கிட்டதால அது இப்ப
யாருக்கும் தெரியாது. அது இருக்குன்னு தெரிஞ்சா
நானே புறப்பட்டு போய் அந்த சித்தரை பார்த்து என்
புருஷன் சாவுக்கு ஒரு நல்ல தீர்வு சொல்லுங்கன்னு
நின்னுடுவேனே...."

- அவளது பேச்சு கணேசனை மட்டுமல்ல -
சந்தானத்தையும் ஒரு நெம்பு நெம்பியது.

"நல்லதும்மா... அந்த டைரிய கொடுங்க. நாங்க
கிளம்பறோம்...."

"இது எதுக்கு உங்களுக்கு?"

"அது....அது....."

"இது என்கிட்டயே இருக்கட்டும். என் புருஷன்
ஞாபகமா நானே இதை வெச்சுக்கறேன்."

"இல்ல.... இது எங்களுக்கு வேணும். தயவு
செய்து கொடுத்துடுங்க."

"முடியாது. இது என் புருஷன்னோடது. என்
கிட்ட தான் இருக்கணும். நீங்களும் ஒழுங்கா ஊர்
போய் சேருங்க. மலைக்கு சாமியாரை பாக்கறேன்னு
போய் உயிரை விட்டு வைக்காதீங்க."

"நாங்க அப்படி எல்லாம் போக மாட்டோம்.
நீங்க டைரிய கொடுங்க. இப்பவே கூட அதை
உங்ககிட்ட திருப்பி தந்துட்றேன்."

- என்று கணேசன் அந்த மந்திர வரிகள் கொண்
பக்கத்துக்காக கையை நீட்டினான். ஆனால் அவ
தர மறுத்தாள். கணேசனிடம் பதட்டம் அதிகரிக்
தொடங்கியது. வெடுக்கென்று அவளிடம் இருந்
பிடுங்கினான். அது அவளுக்கும் அதிர்ச்சி
அளித்தது.

"நீங்க பிடுங்கறத பார்த்தா இந்த டைரில ஏதே
ரகசியம் இருக்கணும்" என்றாள்.

"ஆமாம்....அந்த மந்திரம் இதுல இருக்கு... நா
அதை எழுதிக்கிட்டு உங்க கிட்ட தந்துட்றே
போதுமா?"

"அப்ப நீங்க மலைக்குப் போய் சாமியை பாக்க
போறீங்களா?"

"அதுக்காக தானே இதெல்லாம் எவ்வள
தூரம் உண்மை பொய்யின்னு தெரிஞ்சுக்க வந்தேன்

"வேண்டாம்.... உங்களுக்கும் அந்த தங்க ஆ
வேண்டாம். அப்புறம் என் புருஷன் மாதிரி நீங்களு
ஆகி என் மாதிரியே உங்க மனைவி பிள்ளைங்
ஆயிடப் போறாங்க...."

"இப்பவே கிட்டத்தட்ட அப்படித்தான இரு
காங்க... நான் கடன் சுமைல மூழ்கிக்கிட்டு இரு
கேன். எனக்கும் அதிர்ஷ்டத்துக்கும் கொஞ்சம்கூட
சம்மந்தமேயில்லை. நான்லாம் உயிர் வாழறதே
வேஸ்ட். அப்படிப் பட்ட நான் இந்த முயற்
செய்யறதுல தப்புல்ல. ஒருவேளை என்னை பு
அடிச்சி தின்னா தாராளமா தின்னுட்டு போகட்டும்
என் உடம்பால அதோட ஒரு வேளை பசியாவது

அடங்கும்னா அதுல எனக்கு சந்தோஷம் தான்" -
கணேசன் பதிலோடு அந்த மந்திரம் எழுதப்பட்ட
எண்ணெய் பரவிய தாளை டைரியின் பக்கங்களுக்கு
நடுவில் இருந்து எடுத்தான்.

பின் அந்த மந்திரத்தை ஒரு முறைக்கு பலமுறை
தனக்குள் கூறிக் கொண்டான்.

அப்படியே டைரியை அவள் எதிரில் நீட்டி
னான்.

அவள் அழுத்தமான மௌனத்தோடு அதை
வாங்கிக் கொண்டாள்.

அவனும் காருக்குள் ஏறிட கார் புறப்பட்டது!

10

'ஆள் செய்யாததை நாள் செய்யும்
நாள் செய்யாததை கோள் செய்யும்.'

– சித்தன் வாக்கு!

காருக்குள் சந்தானத்திடம் பேச்சே இல்லை.
நான்கு வழிச்சாலையில் கார் மதுரை நோக்கி சீறிக்
கொண்டிருந்தது.

சந்தானம் பேசாதது கணேசனை நிரடியது.

"என்ன சந்தானம் மௌனமாவே வர்றே?"

"எனக்கு என்ன பேசறதுன்னே தெரியல...."

"உன்னோட எல்லா கேள்விக்கும் தான் பதில்
கிடைச்சிடிச்சே" ஏதாவது சொல்லு...."

"என்னத்த சொல்றது.....?"

"அப்ப உனக்கு மலைக்கு என் கூட வர்ற ஆடி
இல்லைன்னு சொல்லு."

"ஆமாம்...."

"இன்னமும் நீ நம்பலியா - இல்லை பயமா?"

"இரண்டும்தான்..."

"பயம்னு சொல்..... நம்ப முடியலேன்னு சொ
லாதே...."

"எனக்கு சுயமா அனுபவம் ஏற்படாத வ
இதை என்னால நம்ப முடியாதுதான். தங்
ஒண்ணும் தவிட்டு சமாசாரம் இல்லை."

"அதனால....."

"ஒரு சாமியாரால தங்கம் பண்ண முடியும்
அவர்தான் இந்த உலகத்தோட முதல் பணக்கார
பில்கேட்ஸ், ஒபாமா நம்ம ஊர் அம்பானி, டாடான்
கோடீஸ்வரங்களுக்கெல்லாம் அப்பன்.

அப்படி ஒரு அப்பன் குற்றால மலைல ஒ
சாமியாரா திரியறதையே என்னால ஒத்துக்
முடியாது...."

"அப்ப அவரும் இந்த ராமர் பிள்ளைங்கறவ
பெட்ரோல் செய்யறேன்னு சொன்ன மாதிரி ஊரறி
தங்கம் செய்து பிரபலமாகியிருக்கணும்னு சொல்
வர்றியா?"

"நான் அப்படி சொல்ல வரலை.... இப்படி ஒ
சக்தி இருக்கறது உண்மைன்னா இந்த நபர் நிச்சய

இப்படி காட்டுக்குள்ள எனக் கென்னன்னு திரிய
மாட்டான்.... குறைந்த பட்சம் தன் வரைலயாவது
எல்லா வசதிகளோட சந்தோஷமா வாழ்ந்துக்கிட்
டிருப்பான்னு தான் நான் நினைக்கறேன்."

"அப்ப தங்கம் கொடுத்தது எப்படி?"

"அந்த முப்பது கிராம் தங்கம் முதல்ல தங்கம்
தான்னே நான் சந்தேகப்படறேன். கண்ணால நான்
அதை பாக்காததால இதை நான் நம்ப தயாரா
யில்லை."

"சரி சந்தானம். காரை அப்படி ஓரமா நிறுத்து"

"எதுக்கு?"

"நான் கால நேரத்தை வீணடிக்க விரும்பலை.
நான் இப்படியே கிளம்பறேன். நீ வீட்டுக்கு போ...."

"கணேசா... நான் சொல்றத கொஞ்சம் யோசி."

"ரொம்பவே யோசிச்சுட்டேன். இனி செயல்
மட்டும்தான்."

"கணேசா...."

"என்ன தடுக்காதே. வண்டியை நிறுத்து."

- சந்தானமும் காரை ஓரமாக நிறுத்தினான்.
பிறகு திரும்ப ஸ்டார்ட் செய்தான்.

"என்ன பண்றே?"

"நானும் உன்கூட வரேன்."

"வேண்டாம்....அரை மனசா என் கூட வரவே
வராதே."

"நான் வரேன்னு சொன்னது குற்றாலம் வ
கும்தான். கீழ நான் காத்திருக்கேன். நீ மலை ஏ
சாதிக்கப் போறியா இல்லை சாகப் போறியான்
பாக்கறேன்."

"உனக்கு கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை

"நீ எப்படி வேணா எடுத்துக்கோ... நீ தங்
தோட வந்தா சந்தோஷப்படப் போற ஆள் இ
உலகத்துலயே நானா தான் இருப்பேன்..." - சந்தா
காரை திருப்பியதோடு வேகமும் எடுத்தா
பக்கவாட்டில் விருதுநகர் என்னும் பெயர் பலகை
விருது நகர் போய் குற்றாலம் சாலையை பிடி
வேண்டும்.

□□□

ஹோவென்று விரிந்து கிடந்தது அந்த வன
விதம் விதமான தாவரங்கள். நிச்சயம் ஆயிர
கணக்கில் இருக்கும். அவ்வளவுக்கும் என்ன பெய
என்பதில் இருந்து அவைகளால் என்ன பயன் என்ப
வரை அவைகளை பார்க்கும்போது கேள்விக
எழும்.

ஒரு மலை வனம் என்பது சக்திக் களஞ்சிய
என்பது உண்மைதான் என்று நிரூபிப்பது போ
வனம் முழுக்க தாவரங்களின் திமுதிமுப்பு.

ஓங்கி வளர்ந்திருந்த மரங்கள் அந்த மலையி
வீசும் காற்றுக்கு இசைந்து ஆடுவது போல் இருந்த
புதிது புதிதாக பறவைகளும் கண்ணில் பட்ட
டிராஃபிக் சிக்கலே இல்லாத ஆகாய வீதியி
விருப்பப்பட்ட போதெல்லாம் எழும்பிப் பறந்த
ஆச்சரிய மூட்டும் பிறப்பு! பெட்ரோல் விலை உயர்

சாலை விபத்து, வெயில் மழை என்று எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம்.

மேகப் பொதிகளும் மூட்டை மூட்டையாக அங்கும் இங்கும் மிதந்தபடி இருந்தன. மலையை எதனால் எல்லோருக்கும் பிடிக்கிறது என்பதற்கு அந்த இடமே சாட்சியாக இருந்தது.

கணேசனும் நடந்தபடி இருந்தான்.

இந்த பெருமலையில் புலி மேடு எந்தப் பக்கம் என்று எப்படி தெரிந்து கொள்வது? ஒரு இடத்தில் நின்று இளைப்பாறினான். மழை வரும்போல தோன்றியது. கெடிகாரத்தை பார்த்தான் மாலை ஐந்து மணி.

இதற்கு மேல் அந்த புலிமேட்டுக்கு வழி தெரிந்து போவது புத்திசாலித்தனமில்லை என்றும் மனதுக்குள் ஒரு குரல் ஒலித்தது. அந்த மலைப் பிராந்தியத்துக்குள் யாராவது தென்படுகிறார்களா என்று நாலாபுறமும் பார்த்தான்.

வெகுதூரத்தில் யாரோ ஒருவன் வருவது போல் தெரிந்தது. கொஞ்சம் தெம்பு வந்தது. அந்த நபர் மலை மேல் இருந்து இறங்கிக் கொண்டிருந்தான் கணேசன். அவன் வரட்டும் என்பதுபோல நின்று விட்டான். அவனும் நெருங்கி வந்தான். கணேசனை விசித்திரமாக பார்த்தான். பேண்ட்டையும் சட்டையையும் வைத்து காட்டிலாகா அதிகாரியாக இருக்க வேண்டும் என்னும் யூகத்தில்

"என்ன சாமி இங்க தனியா நிக்கறீங்க.... இருட்டு கோட்டை கட்டிக்கிட்டு வரப்போவுது" என்றான்.

"புலிமேடு இங்க இருந்து ரொம்ப தூரமா
என்று கணேசன் கேட்ட நொடி அவன் முகத்தி
சட்டென்று மாறுதல்.

"ஆமா நீங்க காட்டிலாகா ஆபீசர் இல்லையா
"ஏம்ப்பா.... ஆபீசரா இருந்தா தான் பு
சொல்லுவியா?"

"இல்ல புலிமேட்டுக்கு போய் வழி கேக்க
களே....அதான்"

"ஏன் கேக்கக் கூடாதா... இல்லை உனக்கு
தெரியாதா?"

"பேசாம திரும்பிப் போயிடுங்க... நல்
இருக்கறது உங்களுக்கு பிடிக்கலையா?"

"உன்னால வழி காட்ட முடியுமா முடியாத
அதைச் சொல்லு....."

"எனக்கு தெரியாது சாமி - ஆள விடுங்க."
அவன் அப்படி சொல்லவும் கணேசன் முகத்தி
ஏமாற்றம் தொனித்தது. தான் கொஞ்சம் வேகமா
பேசிவிட்டோமோ என்று தோன்றியது.

"சாமி.... திரும்பி நடங்க மழைபிடிச்சு இறங்
முடியாம போனா உங்க மேல அட்டப் பூச்சி ஏறிடு
அப்புறம் ஆண்டவனே வந்தாலும் காப்பாத்
முடியாது. அப்படியே யானைக் கொசுவுங்க கடிச்
ஒரு மாசம் குளிர் ஜுரத்துலயே கெடக்கணும்."
அவன் பேசுவது போல் மிரட்டிவிட்டு இறங்கி
போய் கொண்டே இருந்தான். அவன் பேச்சுக்
தோதாக வானில் மிகப் பெரும் இடி சப்தம்!

மழைப் பொட்டுக்களும் உதிர ஆரம்பித்தன.

பேசாமல் திரும்பி விடுவதே புத்திசாலித் தனம்
என்று தோன்றவே இறங்கி அவனை பின்தொடரத்
தொடங்கினான். அவனும் அதைப் பார்த்து சந்
தோஷப்பட்டவனாக

"பாத்தா சின்ன வயசா தெரியறீங்க.... நீங்கல்
லாம் எதுக்கு சாமி புலிமேட்டுக்கு போறீங்க....?"
என்று கேட்க வேறு செய்தான்.

"அப்ப அது அவ்வளவு ஆபத்தான இடமா?"

"பொறவு... ஒரு பத்து பதினைஞ்சு புலில்ல சாமி
திரியுது. அதுலயும் ஒரு கால் அடி வாங்குன
நொண்டிப்புலி ஒண்ணு முழுசா ஒரு ஆளை அப்
படியே அடிச்சுத் தின்னும். எனக்கு தெரிஞ்சே
அது ஏழெட்டு பேரை அடிச்சு தின்னுருக்குன்னா
பாத்துக்குங்களேன்."

"அப்படின்னா புலிகள் சரணாலயம்னு போர்டு
போட்டுருப்பாங்களே?"

"இங்க போடாட்டி என்ன.... காரையார் டேம்
பக்கம் தான் போட்டுருக்காங்களே...."

"அப்ப புலிங்க அங்க இருந்து இவ்வளவு தூரம்
வருதா?"

"ஆமாம் சாமி.... புலி மேட்டுக்கு நேர் கீழ
பூஞ்சுனைன்னு ஒரு இடம். அங்க மலைப் புல்லு
நல்லா வளரும் அதனால அங்க 'வரையாடு'ங்க
அதிகம் வரும். ஆடுங்க வர்றதால புலிங்க தேடி வந்து
அங்க புல்லுக்கு நடுவுல படுத்துக் கெடக்கும்.....
படுத்துருக்கறேதே தெரியாது. இது தெரியாம புல்
மேட்டு கோலப் பாறை மேல போய் உக்காந்து தவம்
பண்ண ரொம்ப பேர் போவாங்க. பாவம் போய்
உக்காந்த கொஞ்ச நேரத்துல எல்லாம் புலிங்க சுத்தி

வந்து நின்னுடும். அப்புறம் பத்து நிமிசத்துல தலை
மட்டும் தான் மிச்சமிருக்கும். மொத்த உடம்பையு
பிச்சுத் தின்னுப்புடுங்க. தலையை பந்து மாதி
உருட்டி விளையாடும்."

"அது சரி.... ஆனா அங்க தான் பைரவ சித்தர்
ஒரு சாமியார் இருக்காரு. அவர் வந்து காப்பாத்தி
வார்னு சொல்றாங்களே...."

"சாமியாருங்க இங்க பாத்தா சிரிக்கக்கூ
மாட்டாங்க. அப்படிங்கறதுக்குள்ள மறைஞ்சி
வாங்க. இதுல எங்க வந்த காப்பாத்தறது?"

"அப்ப பைரவ சித்தர் எந்த உதவியும் செய்
மாட்டாரா?"

"அப்படி எல்லாம் யாரும் கிடையாதுங்க சாமி
நான் இந்த காட்டுலேயே தான் கிடக்கறேன். எ
கண்ணுல அவர் பட்டதே இல்லை..."

"என்னப்பா இப்படி சொல்றே... அவ
பார்த்து அவர்கிட்ட பல உதவிங்க வாங்கின வங்
இருக்காங்களாமே?"

"எல்லாமே பொய் சாமி... அந்த சாமியை பாக்
மந்திரம் கூட சொல்லணும்னு சொல்வாங்களே...?"

"ஆமாம்.....ஆமாம்."

"அதுவே பொய்யி.... புலிமேட்டு பக்கம் கஞ்சா
வும் நிறைய விளையும். அதை அங்க பயிர் பண்ணின
வங்கதான் யாரும் தேடி வந்துடக் கூடாதுன்னு அங்க
ஒளிஞ்சு இருந்துக்கிட்டு நிறைய சம்பாதிக்கறாங்க
அவங்களுக்கு வேண்டாதவங்க இப்படி சாமியார்

இருக்காரு போனா தங்கம் தருவாருன்னு சொல்லி
வதந்தியை கிளப்பி விட்டுட்டாங்க. அப்பதானே
அங்க யாராவது தேடித் தேடி போவாங்க.
அவங்களுக்கும் இடைஞ்சலா இருக்கும்?"

அந்த மலைவாசி சொன்னதில் இருந்து
புதிதாக ஒரு விஷயம் கணேசன் கவனத்தில் விழுந்து
அவனை வெகுவாய் யோசிக்க வைத்தது.

அதற்குள் அடிவாரம் வந்து சமதரையில் ஒரு
புறம் மண் சாலையும் இன்னொருபுறம் தார்ச்
சாலையும் கண்ணில் பட்டது.

அந்த மலைவாசி மண் சாலையில் நடக்கத்
தொடங்கினான். மழையும் லேசாக பெய்யத்
தொடங்கியது. கீழே காத்திருப்பதாக சொன்ன
சந்தானத்தை தேடிக் கொண்டு போனபோது கார்
மட்டும் இருந்தது. சந்தானத்தை காணவில்லை.
போன் செய்யலாம் என்று முயன்றபோது நாட்
ரீச்சபுள் என்று வந்தது.

'எங்கே போய்விட்டான்?' என்கிற கேள்வி
யோடு அந்த சாலையில் ஊடுருவியபோது தொலை
வில் முன்பு சாப்பிட்ட பஜ்ஜிக் கடையில் கடைக்கார
னுடன் அவன் பேசிக் கொண்டிருந்தான்.

அதை பார்த்துவிட்டு கணேசனும் நெருங்கி
னான். சந்தானம் அந்த கடைக்காரனிடம் பேரத்தில்
இருந்தான்.

"அந்த மந்திரம் இப்ப எனக்கு தெரியும்... பத்து
லட்ச ரூவா வேண்டாம். அஞ்சு லட்சம் போதும்
வாங்கிக்கிறியா?"

"இருங்க நான் போய் எம்எல்வ கிட்ட கேட்
டுட்டு வந்துட்றேன்."

"சீக்கிரமாவாய்யா... நல்ல சந்தர்ப்பம்...."

"மந்திரம் தான் தெரியும்ல - நீங்க மேல போ
ட்ரை பண்ணி பாக்க வேண்டியது தானே?"

"அங்க போய் புலி வாய்ல விழுந்து சாகறதுக்
பணத்தை வாங்கிட்டு போறது புத்திசாலித்த
மில்லியா?"

"நீங்க அப்படி வர்றீங்களாக்கும்....?" கடை
காரன் சிரித்தான். அந்த பேச்சும் பேரமும் கணேச
காதிலும் விழுந்திருந்தது.

"சபாஷ்.... இப்பதான் புரியுது நீ எதுக்கா
என்கூட வந்துருக்கேன்னு...." என்றபடியே சந்தானம்
தோளில் கணேசன் கை போட்டான்.

சந்தானத்துக்கு பகீர் என்றது. கணேசனை
சந்தானம் கொஞ்சம்கூட எதிர் பார்க்கவில்லை.

"கணேசா நீயா?"

"ஏண்டா... நான் திரும்பி வருவேன்னு நீ எதிர்
பார்க்கலியா?"

"அது....அது.... என்னடா ஆச்சு?"

"என்னவிடு.... இது என்ன புது பிசினஸ்....?"

"பிசினஸ்னா... மந்திரத்தக்கு காசு கிடைக்கு
துன்னா வாங்கிக்க வேண்டியதுதானே?"

"எனக்குத் தெரியாமலா?"

"அதான் தெரிஞ்சுடிச்சே...."

"இப்ப நான் வராம போயிருந்தா....?"

"எதுக்கு இப்படி மடக்கி மடக்கி கேள்வி
கேட்கறே? அந்த மந்திரம் உள்ள டைரி பேப்பர்
முதல்ல என் கைல தான் கிடைச்சிச்சு. அதை படிச்ச
தும் நான்தான் உன்னை விட எனக்கு தான் ரைட்ஸ்
அதிகம்."

"அப்புறம்?"

"என்ன அப்புறம் ஆட்டுகுட்டின்னுகிட்டு...
அதான் விபரமா சொல்லிக்கிட்டு இருக்கேன்ல?"
இருவரிடமும் வாக்குவாதம் முற்றி பெரிதாக அது
சண்டையில் முடியும்போல இருந்தது. அதற்குள்
அங்கே ஒரு போலீஸ் கான்ஸ்டபிள் வந்தது தான்
ஆச்சரியம்.

இருவருமே அடுத்த நொடி கப்சிப் என்று
வாயை மூடிக் கொண்டனர்.

"புறப்படுங்க" - என்றார் கான்ஸ்டபிள்.

"எங்கே?"

"உம்....ஸ்டேஷனுக்கு."

"ஸ்டேஷனுக்கா?"

"பின்ன... தெருவுல நின்னு சண்டை போட்டா
வேடிக்கையா பார்ப்போம்?"

"ஐய்யோ சார் நாங்க சண்டை எல்லாம்
போடல.... கொஞ்சம் சத்தம் போட்டு பேசி
கிட்டோம். அவ்வளவுதான்."

"சண்டைன்னு வந்தா சத்தமும் வரும்ல...."

"நாங்க சண்டையே போடலை. நாங்க குளோஸ் ஃப்ரெண்ட்ஸ்."

"அப்ப மந்திரம், அஞ்சு லட்சம்னுல்லாம் காதுல விழுந்துச்சே?"

"அது..... அது...."

"அசடு வழியாம மூடிகிட்டு ஸ்டேஷனுக்கு வாங்க. உங்ககிட்ட பேசணும்னு எஸ்.ஐ தான் அனுப்பினார் என்னை...."

"எஸ்.ஐக்கு எங்கள எப்படி தெரியும்?"

"உங்கள மட்டுமில்ல... உங்க வரலாறே தெரியும். கடைல பஜ்ஜி வாங்கி சாப்ட்டா சாப்ட்டு போய் கிட்டே இருக்கணும். அந்த பஜ்ஜியை பொட்டலம் கட்டி தந்த பேப்பர்ல என்ன இருக்குன்னு பாத்து கேனத்தனமா நீங்க நடந்துக்கறதால எங்களுக்கு தான்யா சிக்கல்..."

- கான்ஸ்டபிள் பேசிய பேச்சு கணேசனை கட்டிப் போட்டுவிட்டது. மௌனமாக இருவரும் கான்ஸ்டபிளை பின்தொடரத் தொடங்கினர்.

கான்ஸ்டபிள் சில அடி தூரம் சென்றுவிட்டு திரும்பி வந்து கடைக்காரனை பார்த்தார்.

கடைக்காரன் அவரை பார்க்கவும் மிரட்சியை முகத்தில் காட்டினான்.

"நீ என்ன பஜ்ஜி கடை மட்டும் தான் நடத்தறியா இல்லை. ஏஜெண்டு வேலையும் பாக்கறியா?".

"ஐயோ அய்யா அப்படி எல்லாம் எதுவு மில்லையய்யா...."

"நீயும் வா.... மாஜி எம்.எல்.ஏ, மிட்டா மிராசுன்னு ஒரு கூட்டத்தோட உனக்கு தொடர்பு இருக்குது போல தெரியுதே?"

"ஐய்யோ அய்யா அப்படி எல்லம் எதுவு மில்லையய்யா?"

"இப்ப நான் என்ன கொள்ளக் கூட்டத்தோட தொடர்பு இருக்குதுன்னா சொன்னேன்... அலற்றே...?"

"எனக்கு இங்க வியாபாரம் நடக்கற நேரங்க.... நான் உங்க கூட வந்தா பொழப்பு போயிடுங்க...."

"மலைல போகக் கூடாத இடத்துக்குப் போய் புலிங்கக்கிட்ட சிக்கி ஒவ்வொருத்தனா செத்து வெச்சா எங்க பொழப்பும் போயிடும் அது தெரியுமா உனக்கு?"

"ஐயா... ஒரு போர்டு எழுதி வெச்சிட்டா யாரும் போக மாட்டாங்களேய்யா...."

"அதை நீ சொல்றியா? வெச்ச போர்டை புடுங்கி போட்டதே நீ தானேய்யா...."

"ஐயோ சத்தியமா நான் இல்லீங்க...."

"நீ பேசாதே.... புறப்படு..."

"ஐயா....."

"புறப்பட்றியா இல்லை ஸ்டேஷனுக்கு போன் பண்ணி ஜீப்பை வர வைக்கவா?"

- அவரது அதட்டல் அவனையும் அவரோடு செல்ல வைத்தது!

கணேசனக்கும் சந்தானத்துக்கும் புதிதாக ஒரு சிக்கல் உருவாகி அதில் சிக்கிக் கொண்டுவிட்டது போல் இருந்தது!

11

'சிந்தம் வேறு - சித்தம் வேறு
புரியாவிட்டால் கோளாறு!'

– சித்தன் வாக்கு

கான்ஸ்டபிளோடு நடந்து செல்வது அவர்கள் மூவருக்குமே ஒரு மாதிரியாக இருந்தது. இதே உள்ளூராக இருந்தால் தெரிந்தவர்கள் பார்க்க நேர்ந்தால் போலீஸ் பிடித்துச் செல்வதாக கருதிட இடமுண்டு. அந்த கூச்சம் கணேசன் சந்தானத்திடம் நிறைய இருந்தது.

பஜ்ஜி கடைக்காரனோ தலையை சொரிந்து கொண்டே வந்தான். அந்த கான்ஸ்டபிள் ஸ்டேஷனுக்கு என்று சொல்லிவிட்டு வேறு எங்கோ கூட்டிச் சென்றார்.

"சார் ஸ்டேஷனுக்குன்னுட்டு எங்கியோ கூட்டிக்கிட்டு போறீங்களே சார்..."

"பேசாம வாய்யா..."

"பொழப்பு போவுது சார்.."

"வராட்டி பல பேர் உயிரே போயிடும்."

"அப்படி எல்லாம் இல்லை சார்...."

"என்ன இல்லை... நீ தானே பல பேரை ஆசை காட்டி மலைக்கு அனுப்பி வைக்கறவன்."

"சத்யமா இல்லை சார்..."

"இப்படி கேட்டா சொல்லமாட்டே... இன்ஸ்பெக்டர் லாடம் கட்டுவார் உனக்கு. அப்ப சொல்லுவே..." - கான்ஸ்டபிளும் பஜ்ஜி கடைக்காரனும் பேசிக் கொள்வதில் இருந்து மலை மேல் எந்த நல்ல விஷயமும் கிடையாது. எல்லாமே திட்டமிடப்பட்ட சதி என்பது போல தான் கணேசனால் யூகிக்க முடிந்தது. சந்தானமும் காதை கடிக்க தொடங்கினான்.

"நான் இதை எல்லாம் நம்ப மாட்டேன்னேன் கேட்டியா... இப்பபாரு..." என்றான்.

அப்போது எதிரில் டிராவலர்ஸ் பங்களா போல ஒரு கட்டிடம். அந்த கட்டிடத்துக்கு வெளியே ஓங்கு தாங்காக வளர்ந்திருக்கும் ஒரு ஊட்டமான மரம்.

மரத்துக்கு கீழ் எஸ்.ஐ. ஒருவர் யூனி ஃபார்மில் நின்று கொண்டிருந்தார். அவரை பார்க்கவும் கணேசனுக்கு சுரீர் என்றது.

மலையில் பார்த்த அதே நபர்.

"நீ.... நீங்க..." - என்று வார்த்தைகளை கடித்தான்.

"என்ன... மலைல விறகு வெட்டி மாதிரி பார்த்த ஒருத்தனை எஸ்.ஐ.யா பாக்கவும் பக்குங்குதா?"

"அ... ஆமாம் சாம்..."

"இப்பவாச்சும் சார்னு வாயில வந்ததே..."

"சார் நாங்க என்ன தப்பு பண்ணோம்னு கூட்டிக்கிட்டு வரச் சொல்லியிருக்கீங்க?"

"எந்த தப்பையும் முட்டாள் தனமா பண்ணிடக் கூடாதுன்னு தான் கூட்டிக்கிட்டு வரச் சொல்லியிருக்கேன்."

"என்ன சார் சொல்றீங்க....?"

"நீங்க புலிமேட்டுக்கு போக ஆசைப்பட்டது எதுக்கு? சித்தர் சாமின்னு ஒருத்தரை பார்த்து தங்கம் வாங்கணும்கற ஆசை தானே?"

"...."

"கமான் - வாயைத் திறந்து சொல்லுங்க."

"ஆமாம் சார்..."

"நீங்க இரண்டு பேரும் என்ன படிச்சிருக்கீங்க?"

"நான் பி.எஸ்.சி கெமிஸ்ட்ரி - இவன் பி.ஏ. ஹிஸ்டரி சார்...."

"கெமிஸ்ட்ரி படிச்ச உங்களுக்கு தங்கம் பத்தி கொஞ்சமாவது தெரிஞ்சிருக்கணுமே...."

"சார் நீங்க விஷயத்துக்கு வாங்க..."

"என்ன விஷயத்துக்கு வர்றது... செயற்கையா தங்கமெல்லாம் பண்ண முடியுமாய்யா... கொஞ்ச மாவது அறிவு வேண்டாம்."

"சார்நம்மால வேணா முடியாம போகலாம். சித்தர் சாமிங்க அப்படி கிடையாது."

"அது...அது...."

"என்ன அது வந்து போயின்னுகிட்டு.... எத்தனை சித்தரைய்யா பார்த்துருப்பே? சித்தரை பத்தி உனக்கு என்ன தெரியும். எங்க அவங்க எழுதின பாட்டுல ஒண்ண சொல்லு பார்ப்போம்."

"என்ன சார் நீங்க... பாத்தா தான் அவங்கள நம்பணுமா. பெரியவங்க பேசிக்கறத வெச்சு நம்பக் கூடாதா?"

"அப்ப இந்த மலைல தங்கம் செய்யற சித்தர் இருக்கார்னு நீ நம்பறே... அப்படிதானே?"

"ஆ.... ஆமாம் சார்... அவர் தங்கம் கொடுத்து சிலர் வாங்கியிருக்காங்க...."

"அப்படி வாங்கினவங்க பேரு?"

"பேரு.....பேரு..." - கணேசன் பேரைச் சொல்ல தயங்கும்போது சந்தானம் இடையிட்டான்.

"சார் அவர் பேர் குமரேசன். தன் அனுபவத்தை அவர் டைரில எழுதியிருந்தார். அதை படிச்சிட்டு தான் நாங்க வந்துருக்கோம். அதுமட்டுமில்ல.... அதுல எழுதியிருந்தெல்லாம் உண்மையான்னு ரொம்ப சிரமப்பட்டு தெரிஞ்சிகிட்டு தான் சார் வந்துருக்கோம்."

"எங்கைய்யா அந்த டைரி?"

"அது இப்ப அந்த குமரேசன் மனைவிகிட்ட இருக்கு சார்...."

"மண்ணாங்கட்டி. அந்த குமரேசன் இப்ப எங்கய்யா?"

"அவர்....அவர்....அவரை புலி அடிச்சிடிச்சின்னு அவங்க மனைவி நம்பறாங்க. ஆனா அவர் சித்தர் கிட்ட தங்கம் வாங்கிகிட்டு வட நாட்டு பக்கம் போயிட்டதாவும் சொல்றாங்க. எது உண்மைன்னு தெரியல..."

"ரெண்டுமே பொய்... அந்த குமரேசனை இப்ப பாக்கறீங்களா?"

- எஸ்.ஐ.'யின் கேள்வி கணேசன் சந்தானம் என்று இருவரையும் ஒரு உலுக்கு உலுக்கியது.

"சார்...."

"என்ன சார்... அங்க பாருங்க..."

- எஸ்.ஐ. காட்டிய ஒரு மரத்தடியில் குமரேசன் உட்கார்ந்திருந்தான். இடுப்பில் ஒரு அழுக்கு வேட்டி தலையில் முகத்தில் ஐந்தாறு வருட முடி!

"சார் இவரா?"

"இவரா என்ன....இவன்னு சொல்லுங்க. மலைல தப்பு பண்றதுக்குன்னே ஒரு கூட்டம் இருக்குது. அவங்ககிட்ட கொத்தடிமையா சிக்கி இருந்த இவனை இப்பதான் மீட்டோம். இவனை வெச்சிருந்த கூட்டம் தப்பி ஓடிடிச்சு.

இவன்கிட்ட நாம நூறு கேள்வி கேட்டா ஒரு கேள்விக்கு பதில் சொல்றான். அப்படி அவன் சொன்னது தான் என் பேர் குமரேசன்கறது. அது மட்டுமில்ல இவன் ஊர் அருப்புக்கோட்டை சரியா?"

"ஆமாம் சார்..." சந்தானம் மிக வேகமாக ஆமோதித்தான்.

"அஞ்சாறு வருஷமா இவன் கொத்தடிமையா இருக்க இவனோட தங்க ஆசை தான் காரணம் கொஞ்சம் தங்கத்தை முதல்ல கொடுத்து சித்தர்கள் மாதிரி அந்த கூட்டத்தை சேர்ந்தவங்க நடிப்பாங்க. அதுல மயங்கி பல மடங்கு தங்கத்தை இந்த குமரேசனுக்கும் வந்தது. சும்மா தங்கம் கிடைக்கப் போகுதுங்கற நம்பிக்கைல சொந்த ஊர்ல பலர்கிட்ட பணத்தை வாங்கிகிட்டு திரும்ப மலைக்கு வந்தான். இந்த முறை பணத்தோட இவனை புடிச்சி தங்க ளோட கஞ்சா தோட்டத்துல வேலைக்காரனா ஆக்கிட்டாங்க. அங்க ஒருத்தர் உள்ள போகலாம். வெளிய மட்டும் வரவே முடியாது."

"சார் அப்ப இவரை புலி அடிச்சதா சொன்ன தெல்லாம்?"

"புலிகள் வரலாம் - தாக்கவும் செய்யலாம் அந்த கூட்டத்தவங்க தங்களுக்கு ஒரு அடிமை வேணும்னு நினைச்சா புலியை துப்பாக்கியால சுட்டு விரட்டிட்டு காப்பாத்திடுவாங்க. இல்லேன்னா விட்டுடுவாங்க."

"அவங்கள உங்களால பிடிக்க முடியலையா சார்?"

"அவங்கள பிடிக்கப் போய்தானே இவன் சிக்கினான்."

"அவங்க என்ன சார் ஆனாங்க?"

"தப்பிச்சிட்டு போயிட்டாங்க.... கொஞ்ச நாள் அடங்கி இருப்பாங்க. திரும்ப வருவாங்க... தங்களுக்கு பணமும் ஆட்களும் தேவைப்படும் போது இதோ இந்த பஜ்ஜி கடைக்காரன் மாதிரி கீழ இருக்கற

நபர்களை இவங்களுக்கே தெரியாம அழகா பயன்
படுத்திடுவாங்க."

"இவங்களக்கே தெரியாமலா? எப்படி சார்...?"

"அதான் மந்திரம்னு ஒண்ணு இருக்கே. அது
இருந்தா தான் சித்தர் வருவார்னா அந்த மந்திரத்துக்
காக இவங்ககிட்ட எல்லாரும் வருவாங்க தானே?"
எஸ்.ஐ.யின் கேள்வி சந்தானம் முகத்தை கோண
வைத்தது. கணேசனும் ஒரு அனல் பார்வை பார்த்
தான்.

"அப்ப அந்த மந்திரம்கறது டுபாக்கூரா சார்..."

"இவங்க எல்லாருமே ஃப்ராடு - மந்திரம் மட்டும்
ஃப்ராடு இல்லையா - என்னைய்யா பேசறே நீ..."

"அப்ப எனக்கு மந்திரம் தெரியும்னு சொல்லி
நான் அதை மலைக்கு போக ஆசைப்பட்றவங்களுக்கு
பணத்தை வாங்கிட்டு கொடுப்பேன். எனக்கும்
பணமாச்சு. மேல அந்த கூட்டத்துக்கும் ஒரு ஆள்
கிடைச்சாச்சு. ஒரு கல்லுல இரண்டு மாங்கா... சரியா
சார்...."

"அதே தான்..."

"அப்ப எல்லாமே பொய்..."

"அதுல என்ன சந்தேகம். இங்க சித்தரால
தங்கம் பண்ண முடியும்னா சென்னைல நகை கடை
வெச்சிருக்கற முதலாளிங்க ஒரு ஹெலிகாப்டர்ல
வந்து இவரை தூக்கிட்டு போயிட மாட்டாங்களா?"

- எஸ்.ஐ. கேட்ட கேள்வி கணேசனை அப்
படியே துவட்டிப் போட்டுவிட்டது. பெரு மூச்சு
அவனிடம் பெரிய அளவில் வெளிப்பட்டது.

சந்தானத்துக்கும் அது எதனால் என்று புரிந்தது.

"என்னடா...எல்லாம் பொய்னான உடனே
இடிஞ்சு போயிட்டியா?"

"ஆமாண்டா... இருந்த ஒரு நம்பிக்கையும்
போயிடிச்சு. நான் கடன்ல மூழ்கி சாகணும்கறது தான்
விதி போல..." சொல்லும்போதே கணேசனின்
கண்களில் கண்ணீர் பீறிட்டது. அதைப்பார்த்த
எஸ்.ஐயும் ஆறுதல் தருவது போல பேசத் தொடங்கி
னார்.

"தம்பி...இந்த மாதிரி ஒசி, இலவசங்களை
நம்பாம உழைக்கற வழிய நம்புங்க. இதெல்லாம் ஒரு
வேளை உண்மையாவே இருந்தாலும் இதை விரும்பக்
கூடாது.

பி.எஸ்ஸி கெமிஸ்ட்ரி படிச்சிருந்தும் ஒரு
சராசரி மனுசனாயிட்டீங்களே...."

"இவன் ஆகலை சார்... இவன் கடன் சுமை
அப்படி இவனை ஆக்கிடிச்சு. முறையா தொழில்
செய்ய பேங்குல கடன் வாங்க போனா சொந்த வீடு
இருக்கா, ஜாமீன் யார் தருவான்னு ஆயிரம்
கேள்விங்க. இவன் என்னதான் பண்ணுவான்?"

- சந்தர்னம் கணேசனுக்காக ஆத்மார்த்தமாய்
பரிந்து பேசினான்.

"அப்ப உங்களுக்கு நான் உதவி செய்யறேன்.
எனக்கு தெரிஞ்ச பேங்க் மேனேஜர்கிட்ட நான்
சிபாரிசு பண்றேன். நேர் வழில நடந்துக்குவேன்னு
என் கைல அடிச்சு சத்தியம் பண்ணுங்க பார்ப்
போம்..." - அவர் கை நீண்டது. கணேசன் அவரை
நம்பிக்கை இல்லாமல் பார்த்தான்.

"என்ன நம்ப முடியலையா?"

"எல்லாமே கனவு மாதிரி இருக்குது சார்..."

"இது கனவு இல்லய்யா... எதார்த்தம்... வேணும்னா உன் எதிர்லயே போன் பண்றேன்... மதுரைக்காரன்தானே?"

"ஆமாம்..."

"என் நண்பரும் மதுரைலதான் மேனேஜரா இருக்கார். இது என்ன அந்த காலமா நினைக்கறது... நடக்கறதுக்கு பல நாள் ஆகும்னு சொல்ல... இது விஞ்ஞான உலகம்லே. என் கைல இருக்கற செல்போன் கொண்டு நான் அமெரிக்காவுல இருக்கற ஒபாமா கிட்ட கூட பேச முடியும்ல..." -என்றபடியே செல் போனை எடுத்து நம்பரை அமுக்கி அந்த பேங்க் மேனேஜரை பிடித்து அழுத்தமாக கணேசனை பற்றி சொல்லி அப்போதே கணேசனையும் பேச வைத்து ஐந்து லட்சரூபாய் லோன் தர சம்மதமும் தந்துவிட்டார்.

கணேசனுக்கு எல்லாமே கனவு போல இருந்தது. பஜ்ஜி கடைக்காரன் திருதிருவென்று முழித்தபடி நின்றான்.

"யார் யார்லே மந்திரம் வேணும்னு உன்கிட்ட கேட்டது... பேரச் சொல்லு...." என்று கையை ஓங்கவும் ஒரு ஏழெட்டு பேர் பேரைச் சொன்னான்.

"இவங்க கிட்ட போய் எல்லாம் பித்தலாட்டம்னு சொல்லணும். மலைப்பக்கம் இனி யாராவது புலிமேட்டுக்கு வழி கேட்டு வந்தா உன்னை தான் முதல்ல அரெஸ்ட் பண்ணுவேன்" என்று கூறவும் பஜ்ஜி கடைக்காரன் காலிலேயே விழுந்துவிட்டான்.

"ஓடுவே..." - எனவும் ஓடினான்.

கணேசனும் சந்தானமும் எஸ்.ஐ,யை நன்றியோடு பார்த்து கைகூப்பி விட்டு புறப்பட்டனர்.

"பாத்து கவனமா போங்க... இந்த குமரேசனை நான் அருப்புக்கோட்டை கொண்டு போய் விட்டு வேன். பிரமை பிடிச்ச மாதிரி இவன் இருக்கக் காரணம் மலைல இருக்கற தில்லை விருட்சம்கற மரத்தோட 'மகரந்தப் பொடி'. அதை சுவாசிச்சா நம்ப நினைப்பு போயிடும். திரும்பி வரதுக்கு பல வருசம் ஆகும். ஆனா வந்துடும். அப்படி வந்தாலும் நடந்தது எதுவும் ஞாபகத்துக்கு வராது' என்றபோது தான் குமரேசன் வெறித்தபடி இருப்பதன் காரணம் புரிந்தது.

அதுவே அருப்புக்கோட்டை மாரியம்மன் கோவிலில் சித்த வைத்தியர் அப்படி இருப்பதற்கும் காரணத்தை சொல்லிவிட்டது.

மனதும் முழுமையாக தெளிந்ததுபோல் ஒரு நிறைவு. புறப்பட்டனர். எஸ்.ஐ. முகத்தில் ஒரு மர்மச் சிரிப்பு. அவர்கள் மறையவும் எஸ்.ஐ. கான்ஸ்டபிளைப் பார்த்தார். கான்ஸ்டபிள் எஸ்.ஐ.யை பார்த்தார்.

"வேசத்த கலைச்சிடலாமா சதாசிவம்" என்று கேட்டார் எஸ்.ஐ.

"உத்தரவு சாமி" என்றார் கான்ஸ்டபிள். இருவரும் குமரேசன் அருகில் சென்று அவனை அழைத்துக் கொண்டு ஒரு மரத்தின் பின்புறம் சென்றனர். பின் மறுபுறமாய் வந்தபோது இருவருமே முற்றாக உறுமாறி சித்தர் பெருமக்களைப் போல் இருந்தனர்.

குமரேசனை பார்த்து "போப்பா... போ... உன் மனைவி எங்களைப் பார்க்க வந்துக்கிட்டிருக்கா... அவ பார்வைல பட்டு அவளோட போய் சேர். இனி ஒரு முறை ஆசை வசப்பட்டு எங்களை பார்க்க வராதே. உன்னாலயும் உன்னைப் போன்றவர்களாலேயும் எங்களுக்குத்தான் அமைதி இல்லாத சூழ் நிலை உருவாயிடுது.

கலியுகத்துல கருணைங்கறது அருளாத் தான் இருக்கணும் - பொருளா மட்டும் இருக்கக் கூடாதுங்கற ஞானத்தை உன்னால நாங்க அடைஞ்சோம்.

நாங்களும் சரி - எங்க சித்து விளையாட்டுகளும் சரி பொய்யா இருக்கறது தான் சரி. அப்பதான் இதெல்லாம் சிரஞ்ஜீவியா இருக்க முடியும். அதுக்கு ஏற்ற ஒரு வேஷத்தை தான் இப்ப போட்டோம். இனி இப்படி நாங்களும் வேஷம் போடாத ஒரு சூழலை காலம் எங்களுக்கு தரட்டும்" என்றபடியே இருளில் நடந்து மறைந்தனர்.

□□□